விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 13 ரபியல் 26 இதழ் 291

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29 11 1986

## 'நாம் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் இஸ்ரேலுடனான சகல தொடர்புகளையும் துண்டிப்போம்'

—அநுரா

(கொழும்பு)

'நாம் பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் இஸ்ரேலுடனான சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வோம்' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

வெளிநாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தின் போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறியதாவது:

'இஸ்ரேலிடமிருந்து இலங்கைக்கு எந்தவித உதவிகிடைத்தாலும் அதனைப் பொருட்படுத்தமாட்டோம். அதனுடனான உறவை துண்டித்துக் கொள்வோம்

'அண்மையில் இஸ்ரேல் ஜனாதிபதி இங்குவந்து சென்றார். அவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் அவரது பாரியாரும் வரவேற்

(11ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதம் முடிவுற்றது

## எனினும் விஜிதரனின் விடுதலைவரை வேறு வடிவத்தில் போராட்டம்

(ரி. சிவகணேசன்)

**யாழ்.பல்கலைக்கழக வர்த்தகபீட மாணவன் விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த பத்து நாட்களாக மேற்கொண்டுவந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை 6-45 மணியளவில் கைவிடப்பட்டது.**

பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் வெகுஜன அமைப்புக்களின் விசேட குழுவொன்று விடுத்த ஐந்து கோரிக்கைகளையும் ஏற்றுக் காவலரென நேற்று விடுதலைப் புலிகள் விடுத்துள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் தெரிவித்ததை அடுத்து இவ் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

நேற்றுக்காலை மாணவர் அமைப்புக்குழு பல்கலைக் கழகத்தில் விஜிதரன் தொடர்பாக சண்டனக் கூட்டம் ஒன்றை நடாத்தியது இதனையடுத்து நடைபெற்ற மாணவர் அமைப்புக்குழுவின் விசேட கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்க்கு என்ற தலைப்பிலான விடுதலைப் புலிகளின் துண்டுப்பிரசுரம் ஆராயப்பட்டது, இத் துண்டுப் பிரசுரத்தில் ஐந்து அம்சக் கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தை கை விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்தையடுத்து மாலை 6-45 மணிக்கு மாணவர் அமைப்புக்குழுஉறுப்பினர் சி. ஜோதிலிங்கம் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். பின் 7-30 மணிக்கு உண்ணாவிரதிகள் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விசேஷ அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

மாணவர் அமைப்புக்குழு கூட்டத்தில் உண்ணாவிரதத்தை கைவிடுவதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும் எதிர்வரும் புதன்கிழமை

(11-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னை
## அரசின் யோசனைகள் நாளை போராளிகளிடம் கையளிப்பு

கொழும்பு, வெள்ளி

இனப்பிரச்னை தீர்வுக்கான இலங்கை அரசின் அண்மைக்கால யோசனைகள் சென்னை தமிழ் குழுக்களிடம் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்திய அரசினால் கையளிக்கப்படும்.

அரசின் ஆலோசனைகளடங்கிய ஆவணத்தை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தின நேற்றுமுன்தினம் புதுடில்லி எடுத்துச் சென்றார்.

(11ம் பக்கம் பார்க்க)

## "மாகாண சபைகள் முழு சட்டவாக்க அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டும்" —சிவா

(வாஷிங்டன்)

'ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் மொழிவாரி மாநிலம் ஒன்றை அமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசினால் ஸ்தாபிப்பதற்கென முன் வைக்கப்பட்டிருக்கும் உத்தேச மாகாணசபைகள் தனியான சட்டவாக்க அதிகாரங்களையும், சட்ட விடயம் தொடர்பாக அதிகளவு அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும்' இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம் சிவசிதம்பரம் அமெரிக்காவில் தெரிவித்துள்ளார்

திரு சிவசிதம்பரம் அமெரிக்க வெளிவிவகார அமைச்

(11ம் பக்கம் பார்க்க)

## 'இலங்கையின் அமைதிக்கு அமெரிக்கா முழு ஆதரவு'
### ஜனாதிபதி றீகன்

வாஷிங்டன், நவ 28

"இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் சகலமுயற்சிகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்தும் தமதுமுழு ஆதரவை அளிக்கும்" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் கூறினார்.

வெள்ளைமாளிகையில் இலங்கையின் புதிய அமெரிக்கத் தூதுவராக திரு துஸ்ஸந்த டீ அல்

(11ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் திட்டமிடாதவொன்று? ஹலீம் இஷாக்

கொழும்பு, வெள்ளி

"இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான உறவுகள் இப்போது வலுவடைந்து வருகின்றன" இவ்வாறு கொழும்பு மத்திய தொகுதி மூன்றாவது எம். பி. ஜனாப் ஹலீம் இசாக் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"இஸ்ரேல் ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்தது குறித்து நாம எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். அவர் இங்கு வந்து எமது ஜனாதிபதி அளித்த பகல் விருந்தில் கலந்து கொண்டார். பாராளுமன்றம், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்துள்ளார். இப்படி இருக்கும் பொழுது அவரது விஜயம் திட்டமிடாத ஒரு நடவடிக்கையா?

(11ம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய

## அறிவித்தல்

உங்களுடைய சௌகரியத்திற்காக ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்களது கொம்பனியில் விற்பனை செய்யப்பட்ட சகல பொருட்களும், எங்களது செம்மணி வீதி நல்லூரிலுள்ள தொழிற்சாலையிலும் இன்று தொடக்கம் விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சாமுவேல் சன்ஸ்
அன் கொம்பனி லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A3210]

## பாலஸ்தீன மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கும்
### ஜனாதிபதி

கொழும்பு, வெள்ளி

"பாலஸ்தீன மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்திவரும் போராட்டத்திற்கு இலங்கை தனது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வ

(11 ம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரில் நேற்றுப் பகல் திடீர் இராணுவத் தாக்குதல்
## மூவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் நேற்று இராணுவத்தினரால் திடீரென மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலிலும் துப்பாக்கிப் பிரயோகத்திலும் யாழ். தொலை தொடர்புத் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர், லிகிதர், பொதுமக்கள் உட்பட மூவர்காயத்துக்குள்ளானார்கள்.

நேற்றுக்காலை 10-30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்தும், யாழ் பொலிஸ்

(11-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

1½ பரப்புக் காணியில் 5 அறைகளோடு புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- திருமதி சி. நவரத்தினராசா, 52/5, இராசாவின் தோட்டம், (Near Railway crossing, யாழ்ப்பாணம்.) (C-6050)

இந்தியன் பழைய ஓர் 1500/- விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- சுகலக்ஷ்மி விரோஸ், மாடடின்வீதி, யாழ்ப்பாணம். (C-6047)

Cockerls and Pullets 4 நாள் சேவற் குஞ்சுகளும், 2½ மாத பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்ரர்), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C-6054

Broiler and Soup Chicken இறைச்சிக் கோழிகளும், விருத்துக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்ரர்), 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C-6053)

நல்ல நிலையிலுள்ள E N. தொடர் இலக்க A 30 கார் விற்பனைக்குண்டு நேரில் பார்வையிட ஞாயிற்றுக்கிழமை மட்டும். 22/4, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொடர்பு:- நிக்கோ. 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-6055)

வீட்டுத் தளபாடங்கள், Burma teak அல்மாரி, Show case, Ceiling Fans, கடை Show case, Vono spring கட்டில்கள், வயலின், Wall Clock, குளிர்சாதனப் பெட்டி, Usha தையல் மெஷின், ஹோல் செற் Electric Organ, தேக்கு சாப்பாட்டு மேசை கதிரைகள், பெட்சீற், Curtain, கம்பளி மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-6027)

## விற்பனைக்கு

Golden Comet சேவற் குஞ்சுகள் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் (C 5996)

இறக்குமதி செய்யப்பட்ட மீன் சாப்பாடு Fish Max விற்பனைக்குண்டு 1 பெக்கட் ரூபா 5-00 விய பாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு M.G M. 777 K K S Rd and 20, 1st Cross Street Jaffna. T P. 22611 (C 5074)

தேக்கு. Steel அல்மாரிகள், Asia சைக்கிள், கசற் றேடியோக்கள் தையல் மெஷின் Dressing Table, சாப்பாட்டு மேசைகள், Show Case Vono Spring கட்டில்கள், Kenwood Electric oven, 4 Burner Gas குக்கர், Gas சிலிண்டர்கள் கிளாஸ் வகைகள், சில்வர் பித்தளைப் பொருட்கள், கம்பளிகள், வெளிநாட்டு Curtains ஹோல்செற், T V Stand மற்றும் பல உடன் விற்பனைக்கு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C 6010)

## தேவை

அனுபவமும் திறமையும் மிக்க, சகல மணிக்கூடுகளும் திருத்துவதற்கு திருத்துனர்கள் தேவை. உடன் நேரில் வரவும். வீனஸ், 266/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C 6032)

எமது 'கண்ணன் காமன்ஸ்' நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. ஆடைகளை வீடு வீடாகக் கொண்டு திரிந்து விற்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். எம்முடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும் தொடர்பு முகவரி:- கண்ணன் காமன்ஸ், கே கே. எஸ். வீதி, கோண்டாவில். (C-6049)


# விலை குறைப்பு!

திரு நளீம் ஹாஜியார் அவர்கள் வடமாகாண மக்களுக்கென, "விசேடகழிவு" எமக்குத் தந்திருப்பதால், பொருட்களின் விலையை நாம் மகிழ்ச்சியுடன் குறைத்துள்ளோம் என்பதை அறியத்தருகிறோம்.

"Bairaha Farm Broilers"
(HALAL - ஹலால்)
(B) பைரகா (F)பாம் புறொய்லர் கோழிஇறைச்சி
1 Kg - 58/-

* மொத்தமாகவும், சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
* வியாபாரிகளுக்கும், விழாக்களுக்காக மொத்தமாக வாங்கும் பொதுமக்களுக்கும் விசேட கழிவுண்டு.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்:

The Medical Hall
No - 224, HOSPITAL ROAD, JAFFNA. Phone - 22575.
மெடிக்கல் ஹோல்
இல - 224, - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22575

A 3205


# இந்து மாகடலில் படைகுறைப்பு: "அமெரிக்காவுடன் பேச்சுக்கு தயார்" — கோர்பச்சேவ்

புதுடில்லி நவ. 28

இந்துமாகடல் பிராந்தியத்தில் வல்லரசு கடற்படைகளின் அளவையும் நடமாட்டத்தையும் குறைத்துக்கொள்வது பற்றிய பேச்சுவார்த்தைகளை அமெரிக்காவுடன் நடத்த சோவியத்தலைவர் கோர்பச்சேவ் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை இந்தியப் பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் சுமார் 30 நிமிட நேரம் அவர் அங்கு உரை நிகழ்த்தினார்.

இந்துமாகடலில் நிரந்தரச் கடற்படைகளை வைத்திருக்கும் ஏனைய நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தாம் தயாரெனத் தெரிவித்த சோவியத்தலைவர் இப்பிராந்தியத்தில் ஆகாயப்பிரயாணத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் உடன்படிக்கையொன்றையும் செய்து கொள்ள சோவியத்யூனியன் சம்மதிக்கும் எனவும் உறுதியளித்தார். (ஊ)

## வகுப்புக்கள்

க. பொ. த (உயர்) 1987 விஞ்ஞான பிரிவிற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. விலங்கியல் திரு. நாகநாதன். தாவரவியல் திரு குணசீலன், இரசாயனம் திரு ரஞ்சன், பௌதிகம் திரு விக்கி, கணிதம் திரு ஆறுமுகம் Modern Education Centre, Karaveddy. C-5926

## சேவை

எப் பொருட்களானாலும் புதியவைகளானாலும், பழையவைகளானாலும் வாங்கவும், விற்கவும் தினமும் வாருங்கள் எங்களிடம் புதியனவும் பழையனவுமாகிய சகலவித பொருட்களும் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கோ லிமிட்டட் (சந்திக்கருகாமையில் கோப்பாய். [C 5943]

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கூறுவிலைகள்

இரத்மலானை மகாராசாஸ்தாபத்திலிருந்து யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றக் களஞ்சியத்துக்கு 6" விட்டத்தையுடைய 20 அடி நீளமான பிவிசி குழாய்களை ஏற்றுக்கூலி இறக்குக்கூலி உட்பட லொறி மூலம் கொண்டுவருவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை ஒரு குழாய்க்கு குறித்து கீழ் ஒப்பமிட்டுள்ள எமக்கு 09 - 12 - 1986ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறு லொறி மூலம் பொருட்களை கொண்டு வரும் லொறிக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

சி. வீ கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

[A 3160]

போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

# வெற்றுப் போத்தல்கள் விற்பனை

கீழ்க்காணும்வெற்றுப்போத்தல்கள் விற்பனைக்குண்டு. இவை நூறு போத்தல்கள் கொண்ட தொகுதியாக விற்கப்படும்.

01 பயின்ற் வெள்ளைப் போத்தல்கள் - 5000.

வெள்ளை ஜாம் போத்தல்கள் - 350

இவற்றை வாங்க விரும்புவோர் ஒரு தொகுதிக்கு ஆகக்கூடிய விலையைக் குறிப்பிட்டு கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குபதிவுத்தபால் மூலம் 8-12--86க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

எஸ். சிவலிங்கம்,
கணக்காளர்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். [A-3159]

# தீவிர கண்காணிப்பு

மட்டக்களப்பு, வெள்ளி;

மட்டக்களப்பு கல்லடி பாலத்தருகில் பொலிசார் நேற்றுமுன்தினம் தீவிர கண்காணிப்பு செலுத்தினர். பல மணிநேரம் நடைபெற்ற இந்நடவடிக்கையில் பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

அண்மையில் மேற்படி பாலத்தருகிலிருந்து சிலிண்டர் குண்டொன்று மீட்கப்பட்டதையடுத்தே இக்கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்புப்பகுதியில் நேரடிமோதலின் போது பலியான போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தி தமிழீழவிடுதலைப் புலிகளினால் மட்டக்களப்பு நகர்ப்பகுதி எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (எ)

# முக்கிய அறிவித்தல்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் மருத்துவக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று 30-11-86 அன்று மாலை 3 மணியளவில் யாழ் பிறிமியர் கபே மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல பேக்கரி உரிமையாளர்களும் சரியாக 2 மணியளவில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

குணரெத்தினம்,
காரியதரிசி.

C 6048

## தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம்

பதிவு எண்: ஜே 1013 ஆரம்பம்: 1949

# வருடாந்த பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி 21-12-86! ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு வைத்தியசாலை துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் எவரேனும் பிரேரணைகளிருப்பின் அவை தமிழில் எழுதப்பட்டு பிரேரிப்பவர் அனுமதிப்பவர் ஆகிய இருவராலும் கையொப்பமிடப்பட்டு காரியதரிசிக்கு 6-12-86க்கு முன்னர் சேரக்கூடியதாக அனுப்பவேண்டும் முகவரியில் மாற்றமிருப்பின் தயவு செய்து அறியத்தரவும்.

குறிப்பு; 1984 - 1985 ஆண்டு காலத்துக்குரிய கணக்குப் பார்வையாளர் அறிக்கையைப் பார்வையிட விரும்புவோர் தினமும் காலை 12-00 மணிக்கு முன்னர் காரியாலயத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் கூட்டுறவு சேவைக்குரிய
க. மகாதேவன்,
கௌரவ காரியதரிசி.

C 6039


# இதோ அறிமுகப்படுத்துகிறோம் 1987 கலண்டர்கள்

எல்லா வகையான அளவுகளில் நீங்கள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம் உங்கள் பெயர் விலாசம் இலவசமாக அச்சிட்டும் பெறலாம். விபரம் அறிய தொடர்பு கொள்ளுங்கள்:

ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ்
17/3 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இதுமட்டுமல்ல:

சகலவிதமான டிசைன்கள், Cut outs, விளம்பர அறிவித்தல்கள், சஞ்சிகைகள், அல்லது மலர்களுக்கு அட்டைப்பட டிசைன்கள், திருமண அழைப்பிதழ்கள், வியூகாட் டிசைன்கள், விளம்பர போஸ்ட்டர்கள், Visiting cards டிசைன்கள், உங்கள் உற்பத்தி பொருட்களின் கவர்ச்சிப் பெட்டிகள், சுற்றுத்தாள்கள் டிசைன்கள் எம்மை அணுகுங்கள்: எமது கலைப்பிரிவு பொறுப்பாளர் திரு. பாலாஜி, B Com. அவர்கள் உங்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவார்

மற்றவர்கள் உறுதியளிப்பதை நாங்கள் முடித்து வைக்கின்றோம்.

செனித்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம். (A-3164)

# தெற்காசியப் பிராந்தியத்தில் இந்திய சமாதான முயற்சிகளுக்கு கோர்பச்சேவ் பாராட்டு

புதுடில்லி, நவ. 28

**தெற்காசியப் பிராந்தியத்தில் அரசியல் சூழ்நிலையை மேம்படுத்தவும், சமாதானத்தை நிலைபெறச் செய்யவும் இந்தியத் தலைவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சோவியத் தலைவர் மிகைல் கோர்பச்சேவ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் சோவியத்தலைவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நேற்றிரவு அளித்த இராப்போசன விருந்தின் போது உரையாற்றுகையிலேயே திரு. கோர்பச்சேவ் இதனைத் தெரிவித்தார். திரு கோர்பச்சேவ் தொடர்ந்த உரையாற்றுகையில் உலகிலிருந்து அணு ஆயுதங்களை இல்லாதொழிக்க எல்லா நாடுகளும் முயற்சிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இப்போதைய சூழ்நிலையில் பாதுகாப்புத்துறையிலும் அரசியலிலும் புதிய அணுகுமுறைகள் வேண்டுமெனவும் குறிப்பிட்ட திரு கோர்பச்சேவ் அயல்நாடுகளுடன் நல்லுறவு கொள்வதால் ஏற்படும் நன்மைக்கு மாற்றீடு இல்லை எனவும் கூறினார்.

**ராஜீவ் உரை**

இவ்வைபவத்தில் ராஜீவ் காந்தி உரையாற்றுகையில், சமாதானத்தைத் தாங்கள் நாடுவதாகக் கூறினார் தமக்கும் சோவியத்தலைவருக்குமிடையிலான பேச்சுக்களின் போது சமாதானமே மையக் கருத்தாக விளங்கியது எனக் கூறிய இந்தியப் பிரதமர் இந்திய - சோவியத் நட்புறவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது எனக்குறிப்பிட்டார். (ஊ)

## உலகச் செய்திகள்

### பிரெஞ்சு அரசின் கல்வி யோசனைகளை எதிர்த்து வீதிகளில் லட்சக்கணக்கான மாணவர்

பாரிஸ் நவ 28

பிரெஞ்சு அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ள புதிய கல்வித்திட்ட யோசனைகளை எதிர்த்து பிரெஞ்சு மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினார்கள். இவ்வூர்வலங்களில் சுமார் 5 லட்சம் பல்கலைக்கழக, கல்லூரிமாணவர்கள் கலந்து கொண்டனர்.

பிரெஞ்சு அரசின் புதிய யோசனைகளானவை மாணவர்கள் பல்கலைக்கழக கல்லூரிகளும் அனுமதி பெறும் சந்தர்ப்பங்களைக் குறைப்பதுடன் வசதி குறைந்தவர்களுக்கு எதிரானவையாகவுமுள்ளன எனவும் கூறப்படுகிறது

பிரெஞ்சு மாணவரின் மிகப் பெரிய ஊர்வலம் பாரிஸ் நகரில் நடைபெற்றது. இதில் சுமார் ஒருலட்சம் மக்கள் கலந்து கொண்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. [ஊ]

### சர்வதேசவிண்வெளிநிலையம் இந்தியாவில் அமைக்க யோசனை

புதுடில்லி நவ. 28

சமாதான நோக்கங்களுக்காக விண்வெளியைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி ஆராய சர்வதேச விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென சோவியத் தலைவர் யோசனை தெரிவித்துள்ளார்.

வளர்முக நாடுகளிலிருந்து விண்வெளியாளர்களைப் பயிற்றுவிக்கக்கூடியதாகவும் செய்மதிகளை விண்வெளிக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

### விமானத் தாக்குதலில் 9 பேர் பலி

லெபனான், நவ 28

தென்லெபனான் நகரிலுள்ள பலஸ்தீனிய அகதி முகாமொன்றின் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டார்.

கொமட் சுப்பர்

கொமட் சுப்பர்
எரி பொருட் சிக்கனம்,
அதிக பாரம் கொள்ளாற்றல்,
திறமையான இயக்கம்
ஆகியவற்றுக்கு



உறுதி வாய்ந்த, வலிமை மிக்க கொமட சுப்பர் எல்லா நிலைமைகளிலும், கடினமான, ஒப்புரவற்ற வீதிகளிலும் அதன் சிறந்த செயலாற்றத்தையும் நம்பகத் தன்மையையும், கடினத் தன்மையும் ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபித்துள்ளது.

விசேட அம்சங்கள் :

- ★ சக்கரங்களுக்கிடையே குறுகிய இடைவெளி 166"
- ★ பாரமேற்றும் இடப்பரப்பு 224"
- ★ ஒரே துண்டான அழுத்தம் கூடிய பின் அச்சு
- ★ வேறு இதர வாகனங்களை விட அதிக சரக்கு கொள்ளும் தன்மை
- ★ சிறிய வட்ட விட்டத்துள் திருப்பக் கூடியதிறமையான இயக்கம்
- ★ அசோக் லேலன்ட் கொமட்டுடன் எல்லா உதிரிப் பாகங்களும்
- ★ மாற்றிக் கொள்ளத்தக்கவை
- ★ மிக நேர்த்தியான முழு ஏயர் - பிரேக் முறை, முற்றிலும் பாதுகாப்புக்கும் இலகுவான பேணலுக்குமான அமைப்பு மற்றும்பல
- ★ இருப்பிவிருத்து / குறுகிய விநியோகம்



மற்றும் பல சகலதும் உள்ளடக்கிய விலை ரூபா 400,000/- க்கு மேல் ஒரு சேஸிஸ்.

dave1558

சந்தைப்படுத்தல் முகாமையாவர்,

லங்கா அசோக் லேலண்ட் லிமிடட்

60, பார்க் வீதி, கொழும்பு-2. தொலைபேசி: 541003

கொள்ளுப்பிட்டி வாக்கர் சன்ஸ் & கம் - லிமிட்டெட் மற்றும், கண்டி, காலி, நுவரேலியாவிலுள்ள அவர்கள் கிளைகள் மூலமாக விற்பனைக்குப் பின்னுன சேவை வழங்கப்படும்.

கொமட் சுப்பர் - இழுவை தேவைக்கு ஈடிணையற்றது.

## மணிவாக்கு

குறுக்குவழியும் கோணல் நடத்தையும் இன்பம் துய்க்க உதவா. இன்பம் அனுபவிக்க நீ விரும்பினால், மற்றவர்களையும் அணைத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

—இங்கர்சால்

# நமது நோக்கு

## றீகனும் ஈரானும்

அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி இறந்தபோது நெப்போலியன் பிரான்ஸில் 10 நாள் துக்கதினம் அனுஷ்டிக்க உத்தரவிட்டான். கொடுங்கோலை எதிர்த்துப்போராடி சுதந்திரத்துக்கும் சமத்துவத்திற்கும் வித்திட்ட பெருமகனை அகில உலகுமே நினைவுகூர வேண்டுமென்று அஞ்சலி உரையில் கூறினான்

வாஷிங்டன் நிறுவிய சுதந்திர நாட்டில், லிங்கன் அமைத்த ஜனநாயக ஆட்சியில் ஜனாதிபதி எவரும் சட்டத்துக்கு மேற்பட்டவரல்ல. பிரிட்டிஷ் மகாராணியும், இலங்கை ஜனாதிபதியும் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட முடியாதவர்களென்பதால் இன்று அமெரிக்க அதிபர் றீகன் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுகிறாரென்ற செய்தி அதிர்ச்சியளிக்கலாம். ஆனால் இன்றைய சூழ்நிலையில், பத்திரிகைகள் என்ன சொன்னாலும் ஊழல்கள் மூடி மறைக்கப்படலாம் என்ற அச்சமுமுண்டு

அது அவ்வாறாக றீகனைப் பற்றிய குற்ற விவகாரம் என்ன? அது அமெரிக்க மக்களுக்கு மட்டும் உரித்தான விடயமா? அல்லது உலக மக்களைப் பாதிக்கும் செயலா?

ஈரானுக்கு ஆயுத விற்பனை செய்தார் றீகன்; இன்னும் தெளிவுபடுத்தினால் வளைகுடா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஈரானுக்கு, அமெரிக்கா ஆயுதஉதவி வழங்கியிருக்கிறது. விபரங்கள் எவையாயினும் இந்தக் குற்றச்சாட்டு உண்மையானால் அதன் விரிவான அர்த்தமென்ன?

ஈராக் - ஈரான் யுத்தம் ஏழாவது வருடத்தில் தொடர்கிறது; இதுவரை உயிரிழந்தவரின் தொகை சுமார் பத்து லட்சம் என மதிப்பிடப்படுகிறது. செலவு அறுபதினாயிரம் கோடி டொலர். பேரிடும் பகுதியினர் ஒரு சாதி, ஒரு இனம், இரண்டும் மூன்றும் உலக நாடுகள்.

இப் பயனற்ற கொடிய போரை நிறுத்த எடுத்த பகீரதப்பிரயத்தனங்கள் பல. அவை பலனளிக்காத நிலையில், உலகில் வல்லரசுகளின் தலைவர்கள் இருவரும் றீகனும் கொர்பச்சேவும் ஐஸ்லாந்தில் சந்தித்தபோது இதனை முடிவுகட்டத்தக்க நடவடிக்கை எடுப்பார்களென்ற எதிர்பார்ப்பும் பரவலாக இருந்தது.

அமெரிக்காவைப் பொறுத்தளவில், இந்த யுத்தத்தில் எந்தப் பகுதியையும்சார்வதில்லையென்று உத்தியோகபூர்வமாக பிரகடனம்செய்தது. ஒரேஒரு நிபந்தனை 'ஒமஸ்' நீரிணையை ஈரான் மூடினால் அமெரிக்கா தலையிட நேரிடுமென்று சொல்லியிருந்தது. பக்கஞ்சாராமைமட்டுமல்ல இந்த யுத்தத்தை நிறுத்த தன்னுடைய சாக்கள் யாரும் சண்டையிடும் இரு பகுதியினருக்கும் ஆயுத உதவி வழங்கினால் அதனை நிறுத்த உதவுமென்ற தம்பிக்கை தெரிவித்திருந்தது.

இந்தப் பின்னணியில் மூன்றாம் உலக நாடுகள் மட்டுமல்ல அகில உலகுமே ஆச்சரியக்கும் சமயத்தில் அமெரிக்கா ஈரானுக்கு இரகசிய ஆயுத உதவி வழங்கியிருப்பதானால் அதன் தாக்கம் எத்தகையது.

தங்கள் பணயக்கைதிகளை விடுவிக்க ஈரானின் செல்வாக்கை நாடியதை றீகன் நிராகரித்திருக்கிறார். அது அவ்வாறாயினும் ஈரானின் உதவிகொண்டு பயங்கரவாதத்தை முறியடிப்பது ஒரு காரணமென்றால் அதனை யார் நம்புவார்?

ஒன்றைச் சொல்லி இன்னொன்றைச் செய்யும் நாடுகள் எங்கள் நாடு உட்பட இவ்வுலகில் பல இந்த யுத்தத்தில் இரகசியமாக ஈராக்கிற்கு பிரான்ஸ், சவூதி, குவைத், எகிப்து உதவுகின்றனவென்பது பகிரங்க இரகசியம்

இதற்கு மறுத்தான்விட ஈரான் ஆயுத உதவி தேடுவதில் இரகசிய எத்தனங்கள் செய்வது சகஜம்.

அரபு நாடுகள் பல ஈரானின் இன்றைய புரட்சி ஆட்சிக்கு எதிரானவை. அயதொல்லா கொமெய்னியின் தீவிரவாதம் தணிந்தபின், வருங்கால ஈரானுடன் நட்புக்கொள்ளவே இந்தத் 'திருவிளையாடல்கள்' என்கிறார் றீகன்.

'காட்டரை வெளியேற்றுங்கள் உங்கள் மக்களை விடுதலைசெய்வோம்' என்ற கொமெய்னியின் பழைய பிடி இலகுவில் தளருமா? போர் தொடரவேண்டும் என்பதே ஈரானின்பேரவா. அது என்னவாயினும் போரை ஒழிக்கும் பெறுப்புடையபெருந்தலைவர் சர்வதேசபயங்கரவாத ஒழிப்பின் முதல் நம்பர் பிரமுகர் இஸ்லாமிய மரபுவாத ஆட்சிக்கு எவருமறியாமல் (இஸ்ரேல் தவிர) ஆயுத உதவி வழங்குவது எரியும் நெருப்புக்கு நெய்விடுதலை ஒக்கும்.

அட்டமத்தை நாடும் அநியாயப்போர் இன்று வேகமடைவதைச் சோதிடம் சொல்லத் தேவையில்லை.

இஸ்ரேல், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற அமெரிக்க கேந்திர ஸ்தானங்கள் இதுகாறும் உலக சமாதானத்துக்கு உதவவில்லை

ஷாவின் ஈரான் மறுபிறப்பெடுக்குமென்று அமெரிக்கா நம்புகிறதா? இன்றைய சர்ச்சை இப்பெரும் நாட்டுக்கு எவ்விதத்திலும் மதிப்பளிக்காது.

---

தொழிலாளியைத் தாக்கிய

## பொலிஸ் பொறுப்பதிகாரி மீது மேல்விசாரணை

நுவரெலியா, வெள்ளி

நாவலப்பிட்டி - தலவாக்கொல்லை பாதையில் தோட்டத் தொழிலாளி ஒருவரைத் தாக்கிய பொகவந்தலாவைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, குடிபோதையிலிருந்தாரென்ற குற்றச்சாட்டின்பேரில், மேல் விசாரணைக்காக கண்டிப் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:

தமிழ்த் தோட்டத்தொழிலாளி ஒருவர் கடந்த புதன்கிழமை காய்கறி மற்றும் தமக்குத்தேவையானபொருட்களை வாங்குவதற்கு டவுனுக்குச் சென்றுள்ளார். அவர் நாவலப்பிட்டி - தலவாக்கொல்லை வீதியில் சென்றுகொண்டிருந்தபோது சாரத்தை மடித்துக்கட்டியிருந்தார் என்ற காரணத்திற்காகக் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியால் கன்னத்தில் அறையப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

வீடுநோக்கிச்சென்ற தொழிலாளி மீண்டும் பத்துப்பேருடன் சம்பவம் நடந்த இடத்திற்குத் திரும்பிவந்தார் எதிர்பாராதவிதமாகக் குறிப்பிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் மீண்டும் நையப் புடைக்கப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த பத்துப் பேரும் பொலிஸ் நிலையத்தை நோக்கிக் கற்களை வீச ஆரம்பித்தனர். இதனால் நிலைமை மோசமடைய ஆரம்பித்தது.

இச்சம்பவத்தையடுத்து பொலிஸ் அதிகாரி பொலிஸ் நிலையத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்செய்தார். இரவு நேரமானதால் எவரும் காயமடையவில்லை.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் தலைமையகத்திற்குப் புகார் செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மதுபோதையில் இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேல் நடவடிக்கைக்காகக் கண்டிப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (க)

---

## 'போராளிகளை சிறையிடுவது போராட்டத்தை பின்தள்ளும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"போராளிகளையும், விடுதலை ஸ்தாபனங்களையும், தலைவர்களையும் சிறைப்படுத்துவது, பொலிஸ் கண்காணிப்புக்குட்படுத்துவது, ஆயுதங்களை கைப்பற்றுவது என்பது எமது போராட்டத்தை பின் தள்ளுவதாகவே அமையும்."

இவ்வாறு கிராமிய உழைப்பாளர் சங்கம் விடுத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இலங்கை வாழ் தமிழ் மக்களாகிய நாம் ஸ்ரீலங்கா பேரினவாத அரசால அடிக்கடி எமது உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்டு வரும் வேளைகளில் அவ்வப்போது அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களையும், பேச்சுவார்த்தைகளையும் நடாத்திட எமது இழந்துபோன உரிமைகளை மீட்டெடுக்க முயற்சித்தோம். ஆனால் ஏகாதிபத்திய சார்புடைய பேரினவாத இலங்கை அரசானது எமது உரிமைகளைப் பற்றியோ, எமது போராட்டங்களைப் பற்றியோ செவி சாய்க்காதது மட்டுமல்லாமல் உதாசீனப்படுத்தியும் வந்தது. இந்நிலையானது இதோடு மட்டும் நின்று விடவில்லை. மொழிச்சுதந்திரம், பிரதேச ஆக்கிரமிப்பு போன்ற அரசின் அடாவடித்தனத்தால் ஆத்திரமடைந்த எமது இளைஞர்கள் பாராளுமன்ற வழிகளாலும், பேச்சுவார்த்தை ரீதியிலும், தமிழ் மக்களாகிய எமது பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது என்ற நிலையில் ஆயுதம் ஏந்திய போராட்ட மார்க்கத்தை கைக்கொண்டனர். இவ்வாறான போராட்டங்களின் தாக்கத்தால் சர்வதேச ரீதியில் எமது பிரச்னை பற்றி வெளிக் கொணரப்பட்டது.

"இவ்வேளையில் எமது பிரச்னையை வைத்துக் கொண்டு எமக்கு உதவுவது போல் எமது பிரதேசத்தை தமது காலடியில் வைத்துக் கொள்ள எண்ணிய கழுகுக் கூட்டங்களும் வட்டமிட்டுத் திரிந்தன. நிலைமை இவ்வாறானதாக இருந்தும் விடுதலை ஸ்தாபனங்களின் கவனத்தால் அவர்களுடைய முயற்சிகள் தோல்வியை தழுவின. இந்நிலை இவ்வாறு இருக்கும் போது எமது அண்டை நாடான இந்தியா அதிலும் தமிழ் நாடானது, இலங்கைத் தமிழர்களுடைய பிரச்னையில் அக்கறை கொள்ளப்பட வேண்டும் என இந்திய மத்திய அரசை வற்புறுத்தியதன் பிரகாரம் இந்திய அரசு எமது விடுதலைப் போராளிகளுக்கு பாதுகாப்பளித்ததுடன் உதவிகளும் வழங்கி வந்தது.

ஆனால் இன்று இலங்கை அரசானது திட்டமிட்ட முறையில் இன அழிப்பு வேலைகளில் ஈடுபட்டு சிறுவர் முதல் பெரியோர் வரையும், வீடுகள் தொட்டு சிறு குடிசைகள் வரையும், கொன்றும் தீயிட்டு கொளுத்தியும் உடைமைகளை அழித்தும் வருகின்ற இவ்வேளையில் எமது விடுதலைக்காக பாதுகாப்புத் தேடி சென்ற எமது போராளிகளையும், விடுதலை ஸ்தாபன தலைவர்களையும் சிறைப்படுத்துவது பொலீஸ் காண்காணிப்புக்குட்படுத்துவது, அவர்களது தொடர்புச் சாதனங்களைக் கைப்பற்றுவது போன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

"எமது உண்மையான விடுதலைக்கு உதவுவதாயின் போராளிகளை சிறைப்படுத்துவதை நிறுத்துவதுடன் சிறைப்பட்டவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்.

போராளிகளிடம் கைப்பற்றிய பொருட்களை உடன் வழங்க வேண்டும்.

எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்."

---

விஜிதரன் விவகாரம்:

## உருத்திரபுரத்தில் உண்ணாவிரதம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில விஜிதரன் கடத்தப்பட்டது தொடர்பாக ஆண்களும் பெண்களும் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இவ் உண்ணாவிரதப்போராட்டத்தின்போது விடுதலைப் புலிகளின் அமைப்பாளர் திரு. மூர்த்தி பேசுகையில்:-

'போராட்டங்கள் சிந்தனைத் தெளிவுடனும் சரியான தலைமையின்கீழும் நடத்தப் படவேண்டும்.

விஜிதரன் கடத்தல் எமக்குப் புதிதான ஒன்றல்ல: இறைகுமாரன், உமைகுமாரன், ஆலாலசுந்தரம், தர்மலிங்கம், சுழிபுரத்தில் ஆறு இளம் புலிகள் இவ்வாறாக் கொலை செய்யப்பட்டனர்.

கொலைசெய்தவர்களே அனுதாபம் தெரிவித்தும் அஞ்சலி செலுத்தியும் வந்தது எம்கண்ணால் கண்ட விடயங்கள்.

இன்றும் இதை யார்செய்தார்களென்ற உண்மை கண்டுபிடிபடாமல் ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது என்ற உண்மையைக் கண்டறியாது நடைபெறுகின்ற போராட்டம் பலனளிக்காது.

விடுதலை இயக்கங்கள் என்ற பெயரில் விடுதலைக்கு எதிரான சக்திகள் செயல்பட்டு வருகின்றன இவர்களின் செயல்களே இவையாகும்.

ஒரு தலைமையின்கீழ் மக்கள் அணிதிரண்டு பிற்போக்குத் தலைமைகளை நிராகரித்து போராட்டத்தை முன்னெடுத்து செல்வதன்மூலமே இவ்வாறான செயல்களை தடுத்து நிறுத்த முடியும்'' என்றார்.

(11ம் பக்கம் பார்க்க)

---

லங்கா சித்த ஆயுர்வேத

## மருத்துவக் கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கை சுதேச வைத்திய சபையால் இம்மாத முற்பகுதியில் நடாத்தப்பட்ட ஆயுர் வேத நூன பரீட்சையில் சித்தியடைந்த லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் விபரம்: எஸ். அருளானந்தம், ரி. அமிர்தசரோஜா, எம். சிவகாமசுந்தரி, ஏ. வேலாயுதம். எம். இன்பநாதன், எஸ். சிறீஜீவகன், எஸ். மங்களா தேவி, எஸ். ஜமுனா, ஏ. பெனிக்னா கொன்சலேற்ரு, ஏ. இரஞ்சிதமலர், எஸ். சச்சிதானந்தன், வி. ஞான யோககாந்தன், கே. நடராசா, கே. திரிலோகமூர்த்தி, ரி. அமிர்தகௌரி, கே. அருள்சோதி. (இ)

---

உ

## முறையிடு மௌனதோசை கேட்காதோ கணேசா!

ராகம்:- ஸ்ரீரஞ்சனி தாளம்:- ஆதி

பல்லவி

தாமதம் இன்னமும் ஏனோ- கணேசா
தாய்மனம் உன்தன் அல்லவோ- ஐயா!
(தாம......)

அனுபல்லவி

முறையிடு மௌனதோசை கேட்காதோ- என்தன்
குறை தீர்த்து எனையாண்டால் ஏற்காதோ?
(தாம......)

சரணம்

சொல்வதற் காருமில்லை உன்னிடமே நாடிச்
செல்வதற் கிடமில்லை உன்பதமே- மேலும்
தள்ளுதற் கேதுமில்லை என்னையல்லால்- வாரி
அள்ளுதற் கேதுமில்லை உன்னருளே!
(தாம......)

- "முருகு"

✶ இன்று விநாயகர்சஷ்டி விரதம் 13-வது நாள்.

# நெஸ்கியூறிற்றி '86

1 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 1000/- (அல்லது ரூ 100,000/- ரொக்கம்)

2 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 500/- (அல்லது ரூ. 50,000/- ரொக்கம்)

3 ம் பரிசு : ஒவ்வொன்றும் ரூ. 25,000/- கொண்ட மூன்று பரிசுகள்

150 ஆறுதல் பரிசுகள் : ஒவ்வொன்றும் ரூ 300/-

## உங்கள் சுபீட்சத்திற்கு வழிகோலும் மகத்தான போட்டி!

ஆம், இதுவே உங்களுக்கு அரிய வாய்ப்பு. நெஸ்கியூறிற்றி 86. வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் ரூ.1000/- வழங்கும். இதுபோன்ற போட்டி இலங்கையில் வேறெதுவும் கிடையாது. இப் போட்டியில் வெல்வதும் சுலபமானது.

### போட்டி விபரம்

போட்டிக்கான கூப்பனை நீங்கள் இலகுவில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக நெஸ்டோமோல்ட் ரின் இப்பொழுது காகித லேபலினால் சுற்றப்பட்டு வருகின்றது. கூப்பனும் போட்டி விதிகளும் இந்த லேபலில் அச்சிடப்பட்டுள்ளன. போட்டிக் காலத்தில் மட்டுமே இந்த லேபல் நெஸ்டோமோல்ட் ரின்னில் ஒட்டப்பட்டிருக்கும். நெஸ்டோமோல்ட் பக்கெட்டின் பின்புறத்திலும் வெட்டியெடுக்கக்கூடிய கூப்பனும் போட்டி விதிகளும் காணப்படும். விதிகளைக் கவனமாக வாசித்துக் கூப்பனைச் சரியாக நிரப்பவும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு முழு லேபல் அல்லது பக்கெட்டில் இருந்து வெட்டியெடுக்கப் பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும். எவ்வளவு கூடுதலான விண்ணப்பங்களை அனுப்புகிறீர்களோ அவ்வளவு கூடுதலான வெற்றி வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

### வாழ்நாள் முழுவதற்குமான வருமானம்

1 ம், 2 ம் பரிசுகளை வெல்வோருக்கென இலங்கை வங்கியில் விசேட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு முறையே ரூ. 100,000/- உம் ரூ. 50,000/- உம் வைப்புச் செய்யப்படும். இரு அதிஷ்டசாலி களும் இந்தத் தொகைகளினால் முறையே ரூ. 1000/ உம் ரூ. 500/- உம் மாதாந்தம் பெறுவார்கள். அல்லது அவர்கள் விரும்பினால் மொத்தத் தொகையை உடனடி யாகவே பெற்றுக் கொள்ளலாம்.

எண்ணிப் பாருங்கள. எவ்வளவு பெரிய அதிஷ்டம். உங்கள் சுபீட்ச வாழ்வுக்கு வழிகோலக்கூடிய மகத்தான வாய்ப்பு இதுவல்லவா?

### போட்டி விதிகள்

1. சகல விண்ணப்பங்களும் தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு ரின் லேபல் அல்லது பக்கெட்டிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்
3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில "நெஸ்கியூறிற்றி '86' என்று குறிப்பிடப்பட்டுச் சகல விண்ணப்பங்களும் நெஸ்லே லங்கா லிமிட்டெட், த. பெ. எண் 2061, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்
4. முதல் நான்கு வாரங்களிலும் முதலாவதாகக் கிடைக்கும் 25 செல்லுபடியான விண்ணப்பங்களுக்கும் முந்துவோருக்கான பரிசாக தலா ரூ. 100 வழங்கப்படும். இவர்கள் ஏனைய பரிசுகளைப் பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.
5. நெஸ்லே லங்கா லிமிட்டெட், சிலோன் நியூட்ரீஷனல் ஃபூட்ஸ், தொம்ஸன் லங்கா ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கை வாழ் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இப்போட்டி தொடர்பான எவ்வித கடிதத் தொடர்புகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது.
7. வெற்றியீட்டுவோரின் பெயர்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

100 முந்துவோருக்கான பரிசுகள்: ஒவ்வொன்றும் ரூ.100

கூப்பன் பக்கட்டில் அச்சிடப்பட்டுள்ளது.

முடிவு தினம் டிசம்பர் 31

வாழ்நாள் முழுவதும் மாதாந்தம் ரூ.1000/- அல்லது ஒரே தடவையில் ரூ.100,000/- ரொக்கம்




விலை: ரூ. 46/-

விலை: ரூ. 27/-

JWT NL 2038

Licence No: S/542

## வழக்கறிஞர்



பத்திரிகை எழுத்தாளரும் சட்ட விரிவுரையாளருமான திரு. பெ. பூலோகசிங்கம் அண்மையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்துறையிலும் வெளிநாட்டு விவகாரத்திலும் நான்கு ஆண்டுகள் பயின்று சிறப்புப்பட்டம் பெற்றுக்கொண்டபின் அங்கேயே சட்டக்கல்வியை மேற்கொண்டு எல் எல். பி. பட்டமும் பெற்றார். பின்னர் இலங்கைச் சட்டக்கல்லூரியிற் சேர்ந்து சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றார்.

இலங்கைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கலை, இலக்கியம், சமூகவியல், வரலாறு, சட்டம், அரசியல், விஞ்ஞானம் ஆகிய பல்வேறு துறைகளிலும் கட்டுரைகளையும் கவிதைகளையும் வெளியிட்டுவந்த இவர் பல நூல்களையும் எழுதியுள்ளார். இவரால் அண்மையில் வெளியிடப்பட்ட "தேன்பொழுது" என்ற நூல் சர்வதேசப்புகழ் பெற்ற இசைமேதை ரவிசங்கரின் பாராட்டுதலை வெகுவாகப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைப் பிரதிநிதியான இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழையமாணவராவார். (எ)

## "நாவலர் பெருமானின் நூல்கள் மீண்டும் பதிப்பிக்கப்படும்"

### பேராசிரியர் 'வித்தி'

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய அளப்பரியதொண்டுகளை தமிழ் பேசும் மக்கள் என்றென்றும் மறக்க முடியாது நாவலர் பெருமானால் எழுதப்பட்ட தமிழ் பாடநூல்களை மீண்டும் பதிப்பித்து தமிழ்பாட நூலில் உள்ள பற்றாக்குறையை ஆறுமுக நாவலர் சபை போக்கவுள்ளது.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத்துணைவேந்தரும், நாவலர் சபை துணைத் தலைவருமான பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

ஆறுமுகநாவலர் சபையினரால் நடாத்தப்பட்ட இவ் விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் நாவலர்சபை இப்பொழுது தான் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது எமது சமூகத்தில் உள்ள கலை இலக்கிய சான்றோர்களை கௌரவிப்பதின் மூலம் இளம் தலைமுறையினருக்கு அவர்களின் திறமைகளை எடுத்துக்காட்டுவதாக அமையும் இந்நிலையில் இந்த வருடம் நாவலர் சபை நாவலர் குருபூசையையொட்டி இருபத்தேழு சான்றோர்களை கௌரவித்து வருது வழங்குகிறது''.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் கௌரவிக்கப்படும் அறிஞர்களைப்பற்றிய அறிமுகவுரை நிகழ்த்தினார்.

ஒவ்வொரு துறைகளிலும் கௌரவிக்கப்பட்டவர்களுக்கான பாராட்டுப் பத்திரங்களை பேராசிரியர் சு வித்தியானந்தன் வழங்கினார்.

கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு.

சிவாச்சாரியர்: பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சைவகுரு: ஸ்ரீ.க. சி. லோகநாதக் குருக்கள், சைவப்பிரசாரம்: ஆத்மஜோதி நா. முத்தையா வித்துவான் வசந்தா வைத்தியநாதன், பாண்டித்யம்: திரு சி தம்பிஐயா உபாத்தியார், பண்ணிசை: திரு வேலுப்பிள்ளை சிவஞானம். தமிழ்வளர்ச்சி: புலவர் ந சிவபாதசுந்தரனார், திரு க. சிவராமலிங்கம், திரு. க சொக்கலிங்கம், சிறுகதை: திரு அ. செ. முருகானந்தன், கவிதை: திரு. இ. முருகையன், பத்திரிகை: திரு. இ. சிவகுருநாதன், சஞ்சிகை திரு. டொமினிக் ஜீவா, ஓவியம்: திரு வீ கனகலிங்கம் (வீகே), சிற்பம்: திரு செ கந்தசாமி ஆசாரியர். இசை: வித்துவான், என். சண்முகரத்தினம், சாகித்தியம்: வித்துவான் என். வீரமணி ஐயர், நாதஸ்வரம்: காவிட்டபுரம் க ராசா, நாடகம்: திரு ஏ. ரி பொன்னுத்துரை, நாட்டுக்கூத்து; திரு வி. வி. வைரமுத்து, நடனம்: திரு. வேல் ஆனந்தன், வில்லிசை: திரு க நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) (வா)

## வாழ்வின் இன்பத்துக்கு சாரணீயம் வழி செய்யும்"

கிளிநொச்சி, வெள்ளி

"இன்று நாட்டிற்கு வேண்டியது சமாதானமேயாகும்: ஆனால் யாழ்ப்பாணத்தில் நாம் காண்பதெல்லாம் ஷெல் தாக்குதலைத் தான்'. என்று பளை மகாவித்தியாலயத்தில் நடபெற்ற சாரணர் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்வியதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் கூறினார்.

இப் பரிசளிப்பு விழாவிற்கு பளைப்பகுதி கொத்தணி அதிபரும் முத்தமிழ்க் காவலருமான திரு. அ பொ செல்லையா தலைமை வகித்தார்.

ஜனாப் மன்சூர் மேலும் பேசுகையில்:- சாரணிய இயக்கம் மிகவும் புனிதமானது, வாழ்வதற்குத் தேவையான எல்லா அம்சங்களும் சாரணியத்தில் உண்டு என்றார்,

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சேவை செய்து சேவையில் இன்பம் காண வேண்டும். இதற்குச் சாரணியம் வழிசெய்யும் என்று கூறிய இவர் பளைப்பகுதியில கல்வியையும் சாரணத்தையும் கட்டி வளர்த்து வருகின்ற இப் பிரதேச கொத்தணி அதிபர் செல்லையாவின் சேவையையும் சிறப்பையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகிறேன் என்றார்,

பளை உதவியாசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி பேசுகையில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சேவை மனப்பான்மைகொண்டவர்களாக திகழவேண்டும் சாரணியம் இந்த வகையில் மாணவர்களை சமூக சேவையில் ஈடுபடுத்தச் சிறந்ததாகும் என்றார்.

கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தமது தலைமையுரையில் ஈழத்தில் கல்வியை நல்ல முறையில் கட்டி வளர்ப்பவர் எமது பகுதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூராவர். அவரது மேலான ஆதரவாலேயே பளைப்பகுதி கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளதென்றார்

உருத்திரபுரம் பகுதி கொத்தணி அதிபர் பெ. சபாபதி சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர்கள் இ. சின்னத்தம்பி, வி நடராசா, எஸ் குணரத்தினம் சமூகசேவையாளர் ஏ. வி. ஜோர்ச், பங்குத்தந்தை அருட்திரு இராஜரத்தினம் அடிகளார் திருமதி. சாந்தி அருந்தவநாதன், சாரணர் ஆசிரியர் திரு புவனேந்திரன் முதலானோர் உரையாற்றினர்கள், [எ]

## "25 மாத காலமாக தாபரிப்பு பணம் செலுத்தவில்லை"

பண்டத்தரிப்பு, வெள்ளி

நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் பிரகாரம் தமக்கும் தமது பெண்பிள்ளைக்கும மாதாமாதம் செலுத்தவேண்டிய தாபரிப்பு பணத்தை தமதுகணவர் கடந்த 1984-ம் ஆண்டு கார்த்திகைமாதம் தொடக்கம் செலுத்தவில்லை என்றும் தற்போது தாங்கள் வாழ்வழியின்றி கஷ்டநிலையில் இருப்பதால் இத்தாபரிப்பு பணத்தை அவரிடமிருந்து தமக்குப் பெற்றுத்தருமாறும் சில்லாலையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் பண்டத்தரிப்பு தமிழீழ கிராம நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்,

தமது கணவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றார் என்றும், கடந்த 25மாதங்களாகதமக்கு செலுத்தவேண்டிய தாபரிப்பு பணத்தை தரவில்லை என்றும் இப்பெண் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு பற்றி பண்டத்தரிப்பு தமிழீழ கிராம நீதிமன்றம் கடந்த 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கூடி இருபகுதியினரையும்அழைத்து விசாரணை நடாத்தியது.

விசாரணையின் போது தாபரிப்பு பணத்தை தாம் செலுத்தமுடியாது என்று பிரஸ்தாப கணவர் தெரிவித்ததை அடுத்து அவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் மறு விசாரணையை எதிர்வரும் 30ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. [எ]

## அபிவிருத்திச் சபை வெற்றி

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன் உப அபிவிருத்திச்சபை விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை அ சி ... னர் விளையாட்டுக் கழக... மிடையில் நடை... சிநேகபூர்வமான உ... தாட்டப் போட்டியில், ... ருத்தி சபை விளையாட்டு... கம் 3-1 கோல்களால் ... பெற்றது.


# பவர்ஸ் உரம்

அதிக விளைச்சலுக்கும்
கூடியஇலாபத்துக்கும்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

ரூபா 2,000/க்கும்மேல்

MASTERS ABC 4/82




...யாட்டுக் கழகத்திற் ... நடைபெற்ற ...வமான உதைபந் ...போட்டியில், அபிவி... ...ப விளையாட்டுக் கழ... ...கோல்களால் வெற்றி (வி)

## "சிறந்ததொரு தொகுப்பு நூல்"

யாழ்ப்பாணம். சனி "கடவுளைக் காண விரும்புப வர்கள் ஆலயங்களில் காண முடியாவிட்டால் இந்த 'பஜனை வளி'யைப் படிப்பதன் மூலம் காணமுடியும். இதுவரை பல 'பஜனவளி'கள் வெளிவந்த போதும் இன்று வெளியிடப் பட்ட பஜனவளி காலத்தால் அழியாத சிறந்த தொ குப்பு நூலாகும்".

இவ்வாறு நல்லை ஆதீனத்தில் அண்மையில் நடைபெற்ற பஜனவளி வெளியீட்டு விழாவை ஆரம்பித்து வைத் துப் பேசிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதம விரிவுரையாளர் மங்கை யற்கரசி திருச்சிற்றம்பலம் உரையாற்றுகையில் கூறினார்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில், 'இக்காலகட்டத்தில் 'பஜன வளி' என்னும் நூலை வெளியிட விரும்பிய திரு ஆறுமுகம் கந் தையாவின் பணி மகத்தா னது. காலத்தால் அழியாத சிறந்த சேவையாகும்" எனக் குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலை மையில் நடைபெற்ற இவ்விழா வில் பிரதம அதிதியாகப் பருத் தித்துறை இராமகிருஷ்ண சேவாச்சிரம அதிபர் சுவாமி சித்ரூபானந்தா கலந்து சிறப் பித்தார்கள்.


# Stauffer
CHEMICALS

ஐக்கிய அமெரிக்காவின்
## ஸ்டோபர் கெமிக்கல் கொம்பனி
இலங்கையில் தமது விவசாய இரசாயனப் பொருட்களின்
ஏக வினியோகஸ்த்தர்களாக

ANGLO-ASIAN AGRO CHEMICALS
## அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்.
நியமிக்கப்பட்டிருப்பதை
தெரிவித்துக் கொள்வதுடன்
இலங்கையின் விவசாயிகளுக்கு
இலங்கையின் தொடர் களைநாசினி
ஒரு நவீன தொடர் களைநாசினி
## அரசோலோ 3-3E
அறிமுகப்படுத்திவைக்கிறது




331 கிறும் மொலினேட் 331 கிறும் புரப்பனில் ஒரு கிலோவில் அடங்கும் அரசோலோ நெற்பயிரில் குதிரைவால்புல் மொண்டி மற்றும் களையினங்களை அழிப்பதுடன் களைகளின் விதைகள் முளைக்கா வண்ணம் தடுக்கும், புதிய சிறந்த தேர்வு, தொடர் களை நாசினி.

ARROSOLO® 3-3E
A Product of
STAUFFER CHEMICAL COMPANY
U.S.A

எச்சரிக்கை:
எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை
கவனமாகக் கையாளவும்.


விலை ரூ. 62/-
அதற்கு மேலும்

# "கஷ்டங்களின்போதும் கல்வியை பேணிக்காப்பது அவசியம்"

மாவிட்டபுரம், வெள்ளி

"இன்றுள்ள சூழ்நிலையில் பாடசாலைகள் சீராக இயங்க முடியாமல் கோவில்களை புகலிடமாகக் கொண்டுள்ளன, யாழ் மாவட்டத்தில் சிலபாடசாலைகள் இவ்வாறு கோயில்களில் இயங்குகின்றன. கஷ்டங்கள் வந்தபோதும் எமது கல்வியை சீரழியவிடாது நாம் பேணிக்காக்கவேண்டும்"

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 4 ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கம் கூறினார்.

மகளிர் இல்லத்தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

"கோவில்கள் கல்விக் கூடங்களாக விளங்கவேண்டும்என்ற நோக்கில் துர்க்காதேவி ஆலயம் ஆற்றிவரும்பணிகள் அளப்பரியன மகளிர் இல்ல குழந்தைகள் பல்துறைகளிலும் சிறந்த பயிற்சியும் அறிவும் பெற்றிருப்பது இதற்குசான்று பகர்கிறது.

"இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகளையும்கோவில்களை புகலிடமாக கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. புன்னாலைக் கட்டுவன் ஆரம்ப பாடசாலை வல்லுவக்கட்டு வன் விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் இயங்குகிறது. வசாவிளான் மகாவித்தியாலயம் சிதைக்கப் பட்டதால் அதன்சில வகுப்புகளும் மேற்படி விநாயகர் மணிமண்டபத்தில் இயங்குகின்றன வல்வெட்டித்துறை பருத்தித்துறை பகுதியிலும் சிலபாடசாலைகள் கோவில்களில் இயங்குகின்றன.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:

"இன்றுள்ள நிலையில் அகதிகள் நம் மத்தியில் பெருகி வருகிறார்கள். இந்நிலையில் ஆலயங்கள் அவர்களுக்கு புகலிடமளிக்கவேண்டிய நிலையில் உள்ளன. ஈழத்து கோவில்களில் துர்க்காதேவி ஆலயம் சமுதாயப்பணியில் சிறந்த ஈடுபாடுகொண்டு முன்னணியில் திகழ்கிறது. மகளிர் இல்லத்தின் சிறந்த செயற்பாடு இதற்கு சிறந்த உதாரணமாகும்.

"ஏனையகோவில்கள் பூஜை வழிபாடுகள், திருவிழாக்களுடன் நின்றுவிடுகின்றன. சமுதாயத்திற்கு உதவும் பணிகளில் அவை ஈடுபடுவதுஇல்லை, மக்களுக்காக பணியாற்றும் தேவஸ்தானம் என்ற பெருமையை துர்க்காதேவி ஆலயம் பெற்று முன்னணியில் திகழ்கிறது இப்பணிகள் மேலும் வளரவேண்டும்"

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமையுரையில் "ஆலயங்கள் அறச்சாலைகளாக விளங்க வேண்டுமென்ற நோக்கில் எமது பணிகள் அமைந்துள்ளன. இதில்மகளிர் இல்லமும் ஒன்றாகும். இந்த இல்லத்தில் உள்ள 46 பேரும் பல்துறைகளில் சிறந்ததேர்ச்சி பெற்றுசிறந்த பிரஜைகளாக உருவாகிவருகின்றனர். இவர்களது எதிர்காலம் பொன்மயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை" என்றார்.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்விமைதிலி சோமசுந்தரம் பரிசில்கள் வழங்கினார். [எ]



சின்னமுத்து நோயானது பின்வரும் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியது என்பது உங்களுக்குத் தெரியுமா?

போஷாக்கின்மை
நியூமோனியா
மூளை வீக்கம்
காது கேளாமற்போதல்
இவற்றுடன் அது
உயிராபத்தைக்கூட
ஏற்படுத்தக் கூடியது.

சின்னமுத்து நோயைச் சாதாரணமான ஒன்றெென நாம் அலட்சியப் படுத்திவிடக் கூடாது. கவனியாது விட்டால் அது உங்கள் பிள்ளையை உடல் ரீதியிலும் உளரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடும்.

தற்போது, நவீன வைத்திய அறிவியல் காரணமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஒரேவேளை நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டால் உங்கள் பிள்ளையை அதன் வாழ்நாள் முழுவதுமே இக் கொடிய சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இப்போதே உங்கள் பிள்ளைக்குத் தடுப்பு மருந்தைக் கொடுங்கள். இந்த ஒரே வேளை மருந்து உங்கள் பிள்ளையை வாழ் நாள் முழுவதும் பாதுகாக்கும். உங்களுடைய இக் கடமையை நீங்கள் தவறாது நிறைவேற்றினால் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஏற்படக்கூடிய அவசியமற்ற விபரீதத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.



துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்
சுகாதார அமைச்சு
யுனிசெப் நிறுவனம்

இன்றே உங்கள் பிள்ளைக்கு தடுப்பு மருந்தை கொடுங்கள்
தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்.

Grant BJK&E UN 1425

# "கணிததீபம்" அணையவில்லை!



"கணித தீபம்" ஆசிரியர் லோறன்ஸ் அணையவில்லை 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்று அருளிய அருந்தமிழ் அம்மையாரின் அழகு வாக்கிற்கு அமைய கணித தீபம் ஆசிரியர் பெனடிக்ற் லோறன்ஸ் அவர்களுடன் உரையாடி உறவாடி கணிதம் கற்ற பாக்கியம் பெற்ற மாணவர்கள் பலரில் நானும் ஒருவன் என்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். கணித உலகில் கால் நூற்றாண்டுக்கு மேல் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தியாகம் நிறைந்த ஆசிரியனாக பெரும்பணி புரிந்தார். அறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற குறிக்கோள்களைச் செயலுருப்படுத்தி தானும் கடைப்பிடித்து தன்னைச் சார்ந்தோரையும் சீரியநெறியில் வாழவழி காட்டியாகத் திகழ்ந்தார். மாணவ செல்வங்களுக்கு கணிதம் கற்பிப்பதில் ஒரு சிறந்த நிபுணராகத்திகழ்ந்தார். இவரினால் உருவாக்கப்பட்ட மாணவ உலகம் கணித உலகில் பல சாதனைகளை சட்டி வந்ததினால் இவருக்கு மட்டுமல்ல இவரை உருவாக்கியதுடன் இவரின் நற்பணியினால் யாழ். புனித பத்திரிசியார் கல்வி அன்னையும் பெருமையுற்றாள்.

கணிதப்பேராசான் லோறன்ஸ் பெருந்தகையின் திடீர் மறைவை (30-11-85)க் கல்வி உலகம் தாங்கமுடியாமல் கண்ணீர் வடித்தது யாழ். புனித பத்திரிசியார் கல்வி அன்னை கன்றை இழந்த பசுப்போல் கதறினள். அவரின் மறைவு தமிழ்ச் சமூகத்திற்கே ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும் இவரை அறிந்த அன்பர்களுடைய உள்ளங்கள் பெரிதும் நெகிழ்ச்சி அடைந்துவிட்டன இறைவனின் திருவுளத்தை யார் அறிவார்? தன்னை உருக்கி அறிவு ஒளியை ஏற்றிய கணித தீபம் லோறன்ஸ் அணைந்தும் அணையவில்லை. கணித தீபம் லோறன்ஸ் இலண்டன் கலை கணிதப் பட்டதாரியாகச் சுய முயற்சியினால் வெற்றியீட்டியதும் அவரின் அறிவையும், ஆளுமையையும், ஒழுக்கத்தையும் உணர்ந்த பல நண்பர்கள் மூலம் பல்வேறு உயர் பதவிகள் அவரை நாடிவந்தன. 'என்னுடையது எல்லாம் உன்னுடையது' 'உன்னுடையதெல்லாம் என்னுடையது' என்று அமலரின் திருவுளத்திற்கு ஏற்ப ஆண்டவன் அவருக்கு அளித்த தனித்துவமிக்க ஞானத்தை யாழ் புனித பத்திரிசியார் கல்வி அன்னைக்குத் தியாகம் நிறைந்த ஆசிரியனாக பூரணமாக அர்ப்பணித்து இறுதி மூச்சுவரையும் கணிதப்பீடத் தலைவனாக கடமை வீறுடன் பணிபுரிந்தார். இவர் கணிதத்தில் மட்டும் வல்லவர் அல்லர். விளையாட்டுத்துறையிலும் ஈட்டிய சாதனைகள் அளப்பரியன. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பதற்கு ஏற்ப கத்தோலிக்க கிளப்பில் செயல்திறன் மிக்க உறுப்பினராகவிருந்த காலத்தில் பிலியட்ஸ் என்னும் உள்ளரங்க விளையாட்டிலும், ரெனிஸ் விளையாட்டிலும் பல சாதனைகளை நிலைநாட்டிப் பல வெற்றிக்கிண்ணங்களை ஈட்டியுள்ளார். வேட்டையாடுவதில் சிறப்பாகக் குறிபார்த்துச் சுடுவதில் திறமைபடைத்தவர். இவரின் அடக்கமும், மௌனமும் இரு அணிகலன்களாகத் திகழ்ந்தன. வாழ்நாளில் குறி தவறாதுசுட வல்ல இவர், நாவினைக் கூட எவரையும் சுட்டதில்லை.

ஆங்கில சூழ்நிலையில் இவர் உருவாக்கப்பட்டாலும் இன்பத் தமிழுக்கு இதயத்தைக் கொடுத்தவர். கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய நூல்களை ஆழமாகக் கற்று ஒழுக்கமே உயிர் என உணர்ந்து வாழ்ந்துகாட்டிய பெருமகன்.

இன்றைய சூழ்நிலையில் பல சோதனைகள் வேதனைகள் மத்தியில் ஓய்வு நேரத்தில் கிரமமாக உடல் நலன் பேணும் விளையாட்டுக்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டுக் கல்லூரியிலும் தனது கணித இல்லத்திலும் இரவு பகலாகத் தன்னை நாடிவரும் உயர்தர மாணவச் செல்வங்கள் ஒளிமயமான வாழ்வு பெற அமரர் லோறன்ஸ் தன்னையே உருக்கி அறிவு ஒளி ஏற்றினார்.

இவரின் ஆசிரியப் பெரும் பணியில் மாட்சிமையைப் பெற்ற கல்வி அன்னை புனிதபத்திரிசியார் வரலாற்று ஏட்டிலே கணிததீபம் அமரர் லோறன்ஸ் ஆசிரியப் பெருமகனை பொன்னெழுத்துகளால் பொறித்து நன்றிப் பெருக்குடன் காலமெல்லாம் நினைவு கூர்ந்துவருகின்றாள் என்றால் அதனைவிடப்பேறு இவ்வுலகில் யாது உளது? நற்பணிகள் ஒருபோதும் மடிவதில்லை என்பதற்கு அவரினால் உருவாக்கப்பட்ட மாணவ பரம்பரை உலகின் எட்டுத்திக்கிலும் நெஞ்சமிருக்கும்வரை நினைவுச் சின்னங்களாக திகழ்கின்றது.

பிறந்தார், இருந்தார், இறந்தார் என்றிராது கணித தீபம் பெனடிக்ற் லோறன்ஸ் பேராசான் அவர்கள் ஆற்றிய பெரும்பணியினால் ஒவ்வொருவர் சிந்தனையிலும் செயலிலும் நினைவுகூர உடலால் பிரிந்தாலும் உள்ளத்தால் ஒன்றிணைந்து அணையாத தீபமாகத் திகழுகின்றார்.

அன்னாரின் ஆன்மா சாந்தி பெற ஓராண்டு நினைவு அஞ்சலிப்பூசை 29-11-86 சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

துரை. ஆரோக்கியதாசன்.



வல்லை வெளிக்கு அப்பால் உப்புமால் சந்தி என ஒரு இடம் உண்டு. நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் இங்கு உண்டு இதற்கு மேற்கில் மணற் ரப்புக்கள் உண்டு. இங்கே வசதிக்கு ஏற்றபடி மண் அகழப்பட்டு வருகின்றது! இது தொடருமானால் இந்தப்பள்ள நிலங்கள் தொண்டமனாறுக் கடலேரியுடன் தொடர்புபட்டு வயல் நிலங்களிலும் உப்புநீர் சூழ்ந்து கொள்ளும் இந்த அபாயம் நீங்க வேண்டுமானால் நவிண்டில், உடுப்பிட்டி, கரணவாய் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்!

— பாணபத்திரன்

## சைக்கிள் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் கடந்தவாரம் 'ஷெல்' தாக்குதல் நடந்த போது காயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவரின் சைக்கிள் காணாமல் போய்விட்டது.

நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவர் 'ஷெல்'லினால் தாக்கப்பட்டு காயமடைந்தார். அவரை சிலர் கூட்டி வந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர் அவரின் சைக்கிளில் கட்டப்பட்டிருந்த பெட்டி மட்டும் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் சைக்கிள் காணாமல் போய்விட்டது.

## கூடைப்பந்தாட்டம்
## கிறீன்பீல்ட் சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டமைச்சின் அனுசரணையுடன் சென். ஜோன்ஸ் கல்லூரி உதைபந்தாட்டத் திடலில் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவந்த கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழகம் சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

கிறீன்பீல்ட் கழகத்திற்கும் ஊர்காவற்றுறை வை எம், சி ஏ. கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் கிறீன்பீல்ட் கழகம் வெற்றி பெற்றது.

மேற்படி சாம்பியன் மோதலுக்கு யாழ் மாவட்ட அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. கோபாலரட்ணம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றிக் கோஷ்டிகளுக்குப் பரிசில்களை வழங்கினர் (வி)

## சர்வதேச

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏவவும் இந்தநிலையம் வசதிகளையுடையதாயிருக்கவேண்டுமெனவும் தெரிவித்த கோர்பச்சேவ் இத்தகையதொரு நிலையம் இந்தியாவில் அமைக்கப்படுவதை தாம் வரவேற்பதாகக் கூறினார். (ஊ)


## ஓராண்டு நினைவஞ்சலி



திரு ஐயாத்துரை சிவசம்பு

மலர்வு: 26-09-1927
உதிர்வு: 09-12-1985
திதி: 29-11-1986

பாசத்துடனும் அன்புடனும் வளர்த்த எங்கள் குலவிளக்கை துயருடன் நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கும்: மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். C 6056

## அறிவித்தல்

### பிள்ளையார் பஸ் சேவை

யாழ்ப்பாணம் – வவுனியா

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் பாதுகாப்பான இடத்தில் உங்கள் பிரயாணத்திற்குரிய ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளலாம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23166 [C 3157]

## சேவை

ஸ்ருடியோ நித்ய சித்ராவின்

### வீடியோ படப்பிடிப்பு

விழாக்கள் அனைத்தும் சிறந்தமுறையில் எடுப்பதற்கு ஆயத்தமாகியுள்ளது.

ஸ்ருடியோ நித்யசித்ரா, சங்கானை.

மற்றும்; வண்ணப்படச் சுருள் கழுவித்தருவதில் விரைவு,
பிலிம்ரோல்கள், அல்பங்கள் விற்பனை,
பிறேம்கள் செய்தல்.

அனைத்துக்கும் அழைக்கின்றது!

ஸ்ருடியோ நித்ய சித்ரா

பிரதான வீதி, சங்கானை.
[C-6018]

## Factory Helpers

எமது தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு தேக ஆரோக்கியமும் திடகாத்திரமும் உள்ள G C E. (O/L) வரை படித்த 25 வயதுக்குட்பட்ட இருபாலாரும் உடனே தேவைப்படுகின்றனர். கீழ்க்காணும் விலாசத்திற்கு 10-12.86க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

C/o ஈழநாடு
இலக்கம்: C 6042
யாழ்ப்பாணம்,

(C 6042)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



விவேகானந்தன்
(பாலா)
தமிழ் மண்ணில்:
14-04-63
ஆள்பவன் அழிப்பு:
29-11-85



பாலச்சந்திரன்
(நியாஸ்)
தமிழ் மண்ணில்:
27-06-58
ஆள்பவன் அழிப்பு:
29-11-85



மகாலிங்கம்
(ஐவன்)
தமிழ் மண்ணில்:
21-01-62
ஆள்பவன் அழிப்பு:
29-11-85

நீங்கள் எதிரிக்கு விருந்தாகியபோது உங்கள் சுவாசங்களையே சுடர்களாய் சிந்தினீர்கள். சருகாகி உதிர்பவர்களைத்தான் சிதைகளால் எரிக்கமுடியும் – நீங்கள் விதைகளாகி விழுந்திருப்பதால் விருட்சங்களாவீர்கள்.

(C-6025) நண்பர்கள்.

# நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில்.

## வழிபடுநர் சபை — 1987

மேற்படி கோவிலுக்கு 1987ம் ஆண்டிற்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும் அல்லது அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும் கீழ்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநரும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தைப் ''பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று கீழே காணப்படும் படிவங்களில் தமக்கு ஏற்புடையதான படிவத்தில் அமைந்த விண்ணப்பங்களுடன் சேர்த்து 1986ம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராந் (31) திகதி மாலை ஐந்து மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில், நயினாதீவு'' என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறும் அல்லது கோவில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழிபடுநர்சபை உறுப்புரிமை விண்ணப்பம்'' எனக்குறிக்கப்படல் வேண்டும்.

### வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:-

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதிற்கு மேற்பட்டவராகவும்.
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்;
   (இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் வழிபடுநராகவும்.
   (ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத்தகுதியுடையவர். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்
2. (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்குகால நித்திய பூசை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அல்லது,
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவபூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும், மேற்கூறிய நித்திய, விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயதுவந்த ஒருவரை தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக நியமிக்க உரித்துடையவராவர். அப்படி உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) வின் கூற்றுப்படி அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப்பணமாக ரூபா (10/-) செலுத்தலாம். தகைமையற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரை (அ) அல்லது (ஆ) வின்படி
   (இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) 'பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.
3. அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்.
4. இக்கோவிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகளை பெறாத ஒருவராகவும்;
5. இக்கோவிலில் லாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

முதலாவது அட்டவணை

### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:-
2. பிறந்த திகதி:-
3. இந்துவா?:-
4. நீர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநரா?:-
5. வாசகம் 2 (அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமைக்குத் தகுதியுடையவராயின், தயவுசெய்து இவ்வாண்டு கோவிலுக்குச் செலுத்திய பணத்திற்கு வழங்கிய பற்றுச் சீட்டின் விபரங்களைத் தரவும்:

| பற்றுச்சீட்டின் திகதி | பற்றுச்சீட்டின் தொடரிலக்கம் | செலுத்திய தொகை | எந்தப் பூசைக்கு அல்லது உற்சவத்திற்கு பணம் செலுத்தப்பட்டதோ அதன் விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கையில் முகவரி:-
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக் கட்டளை / அஞ்சற் கட்டளை பற்றிய விபரம்:

| காசுக்கட்டளை / அ. க தொடரிலக்கம் | வழங்கிய அஞ்சலகமும் திகதியும் | தொகை |
|---|---|---|
| | | |

8. நீர் ஏதாவது குற்றத்தின் பேரில் நீதிமன்றமெதிலாவது குற்றந்தீர்ப்பளிக்கப்பட்டீரா? அப்படியாயின் வழக்கு இல முதலியவற்றுடன் முழு விபரங்களையும் தருக.
9. நீர் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவு பெறும் கோவில் ஊழியரா அல்லது குருக்களா?
10. நீர் கோவிலுடன் ஒப்பந்தமேதாவது மேற்கொண்டுள்ளீரா? அவ்வாறாயின் முழு விபரங்களையும் தருக:-

எனக்கு நன்கு தெரிந்த வகையிலும், நான் நன்கு நம்புகிறவரைக்கும், மேலேயுள்ள விபரங்கள் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகிறேன் நான் இத்தால் வழிபடுநர் சபையின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ளவை இதிற் சொல்லப்பட்டுள்ள விண்ணப்பகாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன அவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவராவார் அவர் இவற்றை விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் 19........ மாதம்......... .........ஆந் தேதியாகிய இன்றுகையொப்பமிட்டார்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

என் முன்பாக
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்:

இரண்டாவது அட்டவணை

### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு வழிபடுநர் சபை

### உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு,

#### வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பித்தல்

அன்புடையீர்,

19......... ஜனவரி முதலாம் தேதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டுக்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ......... எனும் இலக்கத்தைக் கொண்டதும், ரூபா......க்கு ......... தபால் அலுவலகத்தால் வழங்கப்பட்டதுமான காசுக் கட்டளை / தபால் அஞ்சல் கட்டளை இத்துடன் இணைக்கப்படுகின்றது வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கு ஏற்புடைத்தான எல்லாத் தகைமைகளையும் தொடர்ந்து பெற்றிருக்கிறேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுப்பினரின் கையொப்பம்;

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ளவை இதில் சொல்லப்பட்டுள்ள விண்ணப்பகாரருக்கு வாசித்து விளக்கப்பட்டன. அவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவராவார். அவர் இவற்றை விளங்கிக்கொண்டு என் முன்னிலையில் 19......... மாதம்......... .........ம் தேதியாகிய இன்று கையொப்பமிட்டார்.

என் முன்பாக
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

குறிப்பு:- விண்ணப்பகாரரின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இந்து மத குரு. இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

க. கனகசபாபதி,
செயலாளர்,
அறங்காவலர் சபை.

(A 3163)

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

வதிரி ஸ்ரீ பிரமானந்தா ஆச்சிரம முருகன் ஆலயத்தில் ஆறுமுகநாவலர் குருபூசை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஆச்சிரம ஸ்தாபகர் சுவாமி பிரமானந்தா தலைமையில் நடைபெற்ற குருபூசையில் விசேட பூசை வழிபாடுகளும் ஆச்சிரமச் சிறுவர்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன.

(வா)

## பண்பாட்டு இயக்க ஆலோசனைக் கூட்டம்

வேலணை, வெள்ளி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையினரின் ஆலோசனைக் கூட்டமொன்று அடுத்த மாதம் 6ம் திகதி சனிக்கிழமை பி. ப. 2 மணியளவில் இலங்கைக் கிளைத் தலைவர் திரு பொன் பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இவ் ஆலோசனைக் கூட்டத்தில் மலேசியாவில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் நான்காவது சர்வதேச பேராளர் கலந்து கொள்ளும் மகாநாடு பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவிருக்கின்றது.

## இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 13 (29-11-86)
கிழமை- சனி
திதி- திரயோதசி
பி. இ. வரை
நட்சத்திரம்- சுவாதி
பி. இ வரை

மேடம்- கொள்கையில் அதிக பற்றுகள் ஏற்படும், இனசனக் கொண்டாட்டமுண்டு களவிர வழியாலும் நன்மையுண்டு

இடபம்- விரக்தி நிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றும். எதிரிகளும் எக்காளமிடுவர்.

மிதுனம்- இறைபக்தி மேலோங்கும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும். கைத்தொழில் சிறப்புமுண்டு.

கடகம்- செல்வாக்குப் பெருகும். வாழ்க்கையில் தரமும் உயரும். இரு தொழில் புரியவும் நேரிடும்.

சிங்கம்- இதமான வாழ்வு கிட்டும். இளம்பருவத்தினருக்கு இன்பப் பூங்கா. லாபகரமான தொழிலிலும் நன்மையுமுண்டு?

கன்னி- கொள்கையின் கோணலாலே நல்ல சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடுவீர்கள் நம்பிக்கையைத் தவிர்க்கவும். அவசர கோலத்தைத் தவிர்க்கவும்.

துலாம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். உடல்நலனில் அதிக கவனம் செலுத்தவும். படணத்தைப் பின்போடவும்.

விருச்சிகம்- நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். உழைப்பினால் உயர்வுண்டு. கற்றதன் பயன் இன்று கிட்டும்.

தனுசு- தொழில்துறையில் சிக்கல்கள் தோன்றும். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வாழ்க்கையில் புதிரான நிலை தோன்றும்

மகரம்- வணிகர்களுக்கு வியாபார விருத்தியுமுண்டு. புதிய பாதையில வீறுநடை போடுவீர்கள். அன்னை வழியாலும் பொருள் வரவுண்டு.

கும்பம்- தாம்பத்தியவாழ்விலும் அன்பு தவழும். காதலர் வாழ்வும் மலரும். பொறியியலாளர்கள் போற்றப்படுவார்கள்.

மீனம்- கழுகுப் பார்வை வட்டமிடும். போக்குவரத்தில் அவதானம் வேண்டும். முன்னேற்றம் தடைப்பட சூழ்ச்சி வலை விரிக்கப்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய விடுதியிலிருந்தும் இராணுவத்தினர் ஒரே சமயத்தில் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தனராம்.

இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தின் போது யாழ். தொலை தொடர்புத் திணைக்களத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையில் இருந்த கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த ரி. தனபாலசிங்கம் (வயது 30), வலதுபக்க தோள்மூட்டிலும், வலது கையில் இரு இடங்களிலும் பலத்த சூட்டுக் காயத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

அங்கு லிகிதராகக் கடமையாற்றும் இரத்தினசாமி (வயது 40) சிறுகாயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்குப்பின் வீடு திரும்பினார்.

இச்சூட்டுச் சம்பவத்தின் போது தொலைபேசிப் பணம் கட்டுவதற்கு அங்கு நின்றிருந்த ஒருவரும் சிறு காயத்துக்குள்ளானார்.

பலத்த சூட்டுக்காயத்துக்குள்ளான ரி. தனபாலசிங்கம் 4 பிள்ளைகளுக்குத் தந்தையாவார். கடந்த 18 நாட்களுக்கு முன்தான் இவர் மனைவிக்கு இரட்டைப் பெண்குழந்தைகள் பிறந்ததெனவும், பிள்ளைகளின் பராமரிப்புக்காகத் தற்போது கொக்குவில் மேற்கில் வசித்து வருவதாகவும் காயப்பட்டவரின் சகோதரி தெரிவித்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது ஹெலிகொப்டர் ஒன்று தாளப்பறந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் சூட்டுக்கிலக்கான தனபாலசிங்கத்திற்கு சக ஊழியர்கள் முதலுதவிச் சிகிச்சை அளித்து சுமார் பத்து நிமிடங்களுக்குப் பின்பே சைக்கிளில் ஏற்றி கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தனபாலசிங்கத்தின் உடலில் இருந்து ஏராளமான இரத்தம் வெளியேறியிருந்ததால், அவருக்கு உடனடியாக இரத்தம் வழங்குவதற்கு யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன் புரிச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு கடமையில் இருந்த ஊழியர்கள் அனைவரும் கடமைகளை அப்படியே விட்டு தத்தமது வீடுகளுக்குச் சென்றனர். இச்சம்பவத்திற்குப் பின் தொடர்ந்து அங்கு கடமைக்குச் செல்வது பற்றி ஆலோசித்த பின்பே வேலை செய்வோம் என ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (வா)


4வது வாரம்
வெலிங்டன்
திரையில்
10-30, 3-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் சில தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.
ROMANCING
THE STONE
Spy and Action
(Cinemascope)
அடுத்த படம்
MAGNIFICENT
SEVEN
(Attack And Action)


## நாடகமும் கலை நிகழ்ச்சியும்

யாழ்ப்பாணம், சனி

மருத்துவக் குழுவின் சுகாதார நிலைய நிதிக்காக 'பள்ளி எழுந்திடுவீர்' என்னும் நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (வா)

## நாம் பதவிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். ஆனால் வெளிநாட்டு அமைச்சரே சம்பிரதாயபூர்வமாக அவரை வரவேற்க வேண்டும்.

'அமைச்சர் ஹமீட் ஹரிஸ்பத்துவ கண்டி மாவட்ட முஸ்லீம் மக்களின் வாக்குகளைப் பெறவேண்டியதனால் இதனைத் தவிர்த்துக் கொண்டார் இங்குள்ள லிபியா, ஈராக், பாலஸ்தீனிய, ஈரான் ஆகியவற்றின் தூதரகபொறுப்பதிகாரிகள், இஸ்ரேலிய ஜனாதிபதி விஜயம் குறித்து வெளிநாட்டு அமைச்சரை சந்தித்து தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளன.

'அடம்பன் போரில் தமிழ்ப் போராளிகளால் கைதுசெய்யப்பட்ட இருஇராணுவ வீரர்களை அவர்கள் யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல் தொலைவில் தான் வைத்திருக்கிறார்கள். திறமை மிக்க இஸ்ரேலியர்கள் இந்த இராணுவ வீரர்களை மீட்க முடியாமல் தான் உள்ளனர். இதுதானா இவர்களின் திறமை?

'வெளிநாட்டு அமைச்சர் நியூயோர்க் சென்றபோது இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளார். இச்சந்திப்பையிட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. ஆனால் இலங்கைப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்து விட்டன.' (கூ-ரா)

## பாலஸ்தீன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேச தினத்தை முன்னிட்டு அனுப்பிவைத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்கள் கஷ்ட நிலையைச் சர்வதேச சமூகத்திற்கெடுத்துக் காட்டுவதற்காகவே ஐ நாடுகள் ஸ்தாபனம் அம்மக்களுக்கு ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும்வகையில் இத்தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

பாலஸ்தீனிய பிரச்னைக்கு உடனடித் தீர்வைக்காண வேண்டுமென்பதை வலியுறுத்துவதும் இதன்முக்கியநோக்கமாகும்.

''உலகநாடுகள் இப்பிரச்னையை உணர்ந்து குறிப்பாக அதனுல் எழுந்துள்ள மனிதாபிமான பிரச்னைக்கு விரைவில் தீர்வொன்றைக் காண்பதற்கு இந்தத்தினம் உதவுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாதமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார் (எ)

## இலங்கையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ் பதவி ஏற்பதற்காகதமது நியமனப் பத்திரங்களை திரு நீனிடம் கையளித்த போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் கூறுகையில் இன்று இலங்கை விஷசவால் ஒன்றை எதிர்நோக்குகின்றதுஎன்றுகூறிய ஜனாதிபதி இலங்கையில் சமாதானத்தை உருவாக்க இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளை நாம் நன்கு உணர்ந்துள்ளோம் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பேணிப்பாதுகாப்பது அவசியம் என்று கூறினார்

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இலங்கையின் நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு எடுத்து வரும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்என்றும் திரு. நீகன் கூறினார்.

இதேவேளை இந்தநெருக்கடி நிலையைப்போக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் யோசனைகள் சகலபிரிவினராலும்உடன்பாடொன்றை எடுப்பதற்கு நல்ல அடித்தளமாக அமைந்திருப்பதாகவும் ஜனாதிபதி நீகன் மேலும் கூறினார். (எ)

## படையினரின் விசாரணையில் பாகிஸ்தானியர்

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலுள்ள விசேஷ அதிரடிப்படை தலைமை அலுவலகத்தின் அருகே கடந்த புதனிரவு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய பாகிஸ்தானியர் ஒருவர், அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்

## தேர்தல் அலுவலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம் சனி

நுவரெலியாவில் நடைபெறவிருக்கும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான தமிழ் ஆசிரியர் நேர்முக பரீட்சைக்குத் தேவையான வதிவிடத் தகமையை உறுதிப்படுத்தும் 'பிரித்தெடுகை' தேவையானோர் இன்று யாழ் கச்சேரியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## விஜிதரன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி பேசுகையில்: நாம் எந்த ஒரு விடுதலை இயக்கங்களுக்கும் எதிராகப் போராட்டத்தை நடத்தவில்லை நாம் எமது உரிமைகளை நிலைநாட்டவே போராடுகிறோம் என்றார். வேறுபலரும் உரையாற்றினார்கள்.

## இஸ்ரேல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''அவர் இங்கு ஐந்தரை நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார். இஸ்ரேல் உறவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஐ. தே. கவின் முஸ்லிம் அங்கத்தவர்கள் கட்சியை விட்டு விலகிக்கொள்ளலாம் என ஜனாதிபதி கட்சி அங்கத்தவர் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

''இஸ்ரேலியர்கள் கிழக்கு மாகாணத்துக்கு சென்றபின் அங்கு தமிழ முஸ்லிம் மக்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டன முன் எப்போதும் முஸ்லிம் தமிழ் மக்கள் மோதிக்கொண்டதில்லை. கிழக்கு மாகாணத்தில் இஸ்ரேலியர்கள் வருகையை எதிர்த்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கல்முனையில் எத்தனை முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்?

''இஸ்ரேலியர்கள் இங்கு இருப்பதால் முஸ்லிம்கள் மாத்திரமல்லாமல் சகல சமூகத்தவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்

''இஸ்ரேலியர்கள் இங்கு வந்ததை அடுத்து இனப்பிரச்னையில் என்ன முன்னேற்றம் காணப்பட்டது. இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண நீங்கள் இந்தியாவை நம்பி இருக்கிறீர்கள் ஆனால் இஸ்ரேலியர்கள் இங்கு இருப்பதன் மூலம் இந்தியவை ஆத்திரத்துக்குள்ளாக்குகிறீர்கள்.

'நிதியமைச்சர் இந்தச் சபையில் இஸ்ரேலியர் சர்வதேசப்பறையர்கள் என்று கூறியுள்ளார் ஆனால் ஜனாதிபதி ஜயவர்த்தனா ஹொங்கொங் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் இஸ்ரேலியர்கள் பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார் (கூ-கே)

## வெளிநாடு செல்வோரை ஏமாற்றும் முகவர் நிலையங்கள் ஈழத்தில் இயங்கமுடியாது

### ஈ. பி. ஆர். எல் எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

''ஈழப் பிரதேசத்தில் சிவில் நிர்வாகங்களை சீராக்கி ஒழுங்கை நிலைநாட்டும் நடவடிக்கையின் ஒரு அங்கமாகத்தான் வெளிநாட்டு நிறுவனங்களை கட்டுப்படுத்தி பணமோசடி எம்நாட்டுப்பெண்களை அந்நியநாட்டில் விபச்சார விடுதியில் விற்றல் போன்ற செயல்களை ஒழிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம்''

வெளிநாட்டு நிறுவனங்களை கட்டுப்படுத்துதல் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் 'எமது இந்த நடவடிக்கைக் கூடாக வெளிநாட்டுக்குச் செல்பவர்களை ஊக்குவித்தல் அல்லது அவர்களது பணத்திற்கு உத்தரவாதமளிக்கிறோம் என்று மக்கள் எண்ணுவார்களாகில் அதுதவறானதாகும். இதேவேளை போராட்டம் இங்கு நடக்கும்போது வெளிநாட்டுக்கு தப்பித்துசெல்பவர்களை நாம் ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை இருந்தும் தமது மேசமான பொருளாதார பிரச்னைகளால் வெளிநாட்டிற்கு வேலைதேடிசெய்பவர்களை எம்மால் முழுமையாக கட்டுப்படுத்த முடியாது''

இவ்வாறு செய்பவர்களை ஏமாற்றும் முகவர்நிலையங்கள் ஈழப்பிரதேசத்தில் இயங்க முடியாதென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தம்மால் பின்வரும் முகவர் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நஜெயாட்ணம், கல்வியங்காடு. நா.ரஞ்சன்சிறுப்பிட்டி, வே செல்வத்துரை, 12, புது வீதி, அத்தியடி யாழ்ப்பாணம். ரஸ்றவல்ஸ் டுவேர்ஸ் லிமிற்றெட், 11 A, மொம்சாக் கட்டடம், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம், வே முத்துராசா நாயன்மார்கட்டு. பிருந்தா ரவல்ஸ் சேர்விஸ் 61.72 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் செ அன்ரன் கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறை.

## இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆலோசனைகளை இந்திய உயர்மட்ட அமைச்சர்கள் மற்றும் திரு. பி. சிதம்பரம் திரு. நட்வட்சிங் ஆகியோர் ஆராய்ந்து வருகின்றனர்

திரு பி. சிதம்பரம், திரு. நட்வட்சிங் ஆகியோர் நாளை ஞாயிற்றுக்கிழமை சென்னை சென்று போராளிகள் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவார்கள்.

இச் சந்திப்புக்களை அடுத்து அடுத்தவார முற்பகுதியில் திரு பி. சிதம்பரம் ஜனாதிபதியையும் மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து பேச்சு நடாத்துவார்.

ஜனாதிபதியுடனான பேச்சுக்களின் போது, தமிழர்குழுக்களுடன் நடத்திய ஆலோசனைகளின் பெறுபேறுகள் பற்றி இந்திய தூதுக்குழுவினர் எடுத்துக் கூறுவர்.

இதனைத்தொடர்ந்து இலங்கையின் நிலை தெளிவாகவெளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு மாகாணசபையின் கீழ்வரும்நிர்வாகச்செயல்பாடு, அதிகாரம் பகிர்ந்தளிப்பு காணிக்கொள்கை ஆகியன பற்றிய விளக்கங்களை இலங்கை அரசு திரு பேர்னாட் திலகரத்தின மூலம் அனுப்பி வைத்துள்ளதாக அறியப்படுகிறது. (எ-கூ)

## மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சின் அதிகாரிகள், காங்கிரஸ் வட்டாரம், மனித உரிமைகள் விவகாரங்களை கையாளும் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் இலங்கைத் தமிழர் தொடர்பான சகல பிரச்னைகளையிட்டும் பேச்சு வார்த்தை நடத்தினார்.

(12-ம் பக்கம்பார்க்க)

## பல்கலைக்கழக---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை சகல பீட வகுப்புக்களையும் பகிஸ்கரிப்பதெனவும் அதன்பின் எவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதெனவும்அன்று தீர்மானிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

விஜிதரன் விடுவிக்கப்படும் வரை மாணவர் போராட்டங்கள் வெவ்வேறு வடிவங்களில் நடாத்தப்படுமெனவும் அமைப்புக் குழு தெரிவித்தது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவ மாணவிகளான கோகிலேஸ்வரி, விஜயகுமாரி, குகநேசன், விக்னேஸ்வரன், செல்வநாயகம் ஆகியோரும் பொதுமக்கள் சார்பில் பிரசாத் என்பவரும் ஆரம்பத்தில் பங்கு பற்றினர் இவர்களில் கோகிலேஸ்வரி சுகவீன முற்றமையால் அவருக்குப் பதிலாக உருத்திரமூர்த்தி ஒளவை என்றமாணவி உண்ணாவிரதத்தில் பங்கு பற்றினார். (கே)


எமது புதிய வெளியீடுகள்!
1. சரத்பாபு ★ சாந்திகிருஷ்ணன் ★ ஸ்ரீவித்யா
"அன்புள்ள மலரே"
(SUHAN MASTER)
2. M. G. R ★ சரோஜாதேவி ★ நாகேஷ்
"பணத்தோட்டம்"
(PYRAMID MASTER)
3. சுரேஷ் ★ காயத்ரி ★ செந்தில்
"சிவப்பு மலர்கள்"
(PYRAMID MASTER)
4. ராஜீவ் ★ ஜீவிதா ★ பத்மினி
"ஆயிரம் கண்ணுடையாள்"
(PYRAMID MASTER)
5. WAR FILM:-
"HOSTAGE DALLAS"
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23665.
(A 3211)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
29-11-86 சனிக்கிழமை

சரியான தகவல் கிடைத்தால்

# விஜிதரனை மீட்டெடுக்கப் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் - புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம் சனி

"விஜிதரன் விவகாரத்தில் விடுதலை ஸ்தாபனங்கள் அடைத்தும் கை விரித்துவிட்ட இந்நிலையில் சரியான தகவல் எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் எங்கிருந்தாலும் விஜிதரனை மீட்டெடுக்க எம்மாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குவோமென உறுதியளிக்கிறோம்".

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள்; பல்கலைக் கழக மாணவர்களுக்கு என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

'மாணவர்களது இப் போராட்டத்தை மதித்து போராட்டத்துக்குள் போராட்டமாக அராஜகத்துக்கு எதிராக நடாத்தப்படுவதென்பதை அனைவரும் உணரவேண்டும்.

"பல்கலைக் கழகத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சகலரதும் பாதுகாப்பிற்கும் உறுதியளிக்கின்றோம்

கேசவன் தாக்கப்பட்டது அரசியற் காரணமென்பதை மருத்துவபீட மாணவர்கட்கு கொடுக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது: வேண்டுமாயின் எழுத்துருவில் அதன் பிரதி சமர்ப்பிக்கப்படும். பல்கலைக் கழக மாணவர் ஒருவர் வெளியே கைதுசெய்யப்பட்டால் அதுபற்றி கூடிய விரைவில் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்படும். பல்கலைக்கழக வளவிற்குள் முன் வைக்கப்படும் சித்தாந்த ரீதியான எந்தக் கருத்துக்காகவும் பல்கலைக்கழக மாணவர்கள் எவருக்கும் எதிராக வெளியே நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது: பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் மூலம் மாணவர்களது கருத்துக்கள் விமர்சனங்கள் என்பவற்றை வெளியிடவும்;

மாணவர்களது வேண்டுகோளுக்கு மட்டுமன்றி எம் மீது சுமத்தப்பட்ட தப்பபிப்பிராயத்தை நீக்குவதற்காகவும் விஜிதரனை தேடுவதில் முழு மூச்சாக ஈடுபடுவோம்.

'விஜிதரனின் விவகாரத்தைத் தொடர்ந்து உங்கள் முன் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளுக்கான தில்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு அவர்களால் நியாயமானதென ஏற்கப்பட்ட பின்னரும், இந்த ஐந்து கோரிக்கைகள் உட்பட விஜிதரனுடன் சம்பந்தப்படாத, விடுதலைப் புலிகள் அரசியல் அநாதைகளாக்கக் கூடிய மேலும் இரு கோரிக்கைகள் வெகுஜன அமைப்பின் மூலம் எம்முன் கொண்டுவரப்பட்டு பேச்சு வார்த்தை தொடரமுடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. இப்படியான சூழ்நிலைகள் முற்றுமுழுதாக எம்மை எதிர்ப்பதற்காக உருவாக்கப்படுவதை அவதானிக்கும்போது, பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் தீயசக்திகளின் வலைக்குள் திட்டமிட்டு விழுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உணரக் கூடியதாயுள்ளது.

"தமிழீழத்திற்கான தயார்ப்படுத்தல்கள் முற்றுப்பெற்று வரும் இந்நிலையில், கடந்த பெங்களூர் மகாநாட்டில் தமிழீழத்தின் சார்பாக எமது தலைவர் பிரபாகரன் மட்டும் அழைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து எம்மை மக்கள் மத்தியிலிருந்து பிரிப்பதற்கெனவும், எமது போராட்டத்தை மழுங்கடிப்பதற்கெனவும் சில தீயசக்திகள் முயலும் என்பதனையும் முன்னரே நாம் மட்டுமல்ல அரசியல் தீர்க்க தரிசனம் கொண்ட எவரும் அறிந்திருப்பர் அந்த தீயசக்தியின் செயலே இன்று தாண்டவமாடுகின்றது.

' நாம் எவ்வகையிலும் உங்களது போராட்டத்தை குழப்பப் போவதில்லை. முற்று முழுதான பாதுகாப்பை வழங்கவே முன்வந்துள்ளோம். கடந்த 26ம் திகதிமுதல் இரவுபகலாக எமதுபாதுகாப்பைநாம் வழங்கியதற்கு காரணம் தீயசக்திகள் சிலர் இப் போராட்டத்தை முறியடிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டதனலாகும். இன்றைய நிலையில் எமது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மாணவர்களுக்காக மட்டுமன்றி எம் மீது சுமத்தப்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் முகமாகவும் இருக்குமென்றே நாம் கருதுகின்றோம். [எ]

## துப்பாக்கி ரவைக்கூடு

யாழ்ப்பாணம், சனி

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்தும் யாழ். பொலிஸ்நிலைய விடுதியிலிருந்தும் ஹெலிகொப்டரில் இருந்தும் நேற்றுக்காலை 10 30 மணியளவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினால் வெற்றுத் துப்பாக்கி ரவைக்கூடு ஒன்று யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் விழுந்துள்ளது (வா)

## வெடிகுண்டுப் புரளி மக்கள் கலக்கம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு கல்லடிகடற்கரை வீதியில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட வெடிக்குண்டுப்புரளியால் அப்பகுதி மக்கள் பெரிதும் கலக்கமடைந்து வீடுகளைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது எனினும் எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை.

கல்லடி கடற்கரை வீதியில் இனந்தெரியாத நபர்களால் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருப்பதாக ஏற்பட்ட வதந்தியையடுத்து அவ் வீதியில் இருமருங்கிலுமிருந்த பல குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்திற்குச் சென்றனர்.

அக்குண்டுப்புரளி தவறானது என தெரிந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்கள் திரும்பினர். (சி)

'ஷெல்' அடிப்போம்!

## வர்த்தக நிலையங்களுக்கு தொலைபேசி பயமுறுத்தல்

யாழ்ப்பாணம், சனி

"ஹலோ! ஆஸ்பத்திரிக்கு முன்னுள்ள டிஸ்பென்ஸரிய? எங்கட பெரியவர் வரப்போறார் வந்தவுடன் ஷெல் அடிக்கச் சொல்லுவார். 12 00 மணிக்கு ஷெல் அடிப்பேம் உங்கட பாதுகாப்புக்கு பாவம் என்று சொல்லுகிறோம் என்று கொச்சைத் தமிழில் தொலைபேசி அழைப்பொன்று நேற்று யாழ் நகரிலுள்ள மருந்து விற்பனை நிலையத்திற்கு வந்தது இதேபோன்று அப்பகுதியிலுள்ள வேறு இருவர்த்தக ஸ்தாபனங்களுக்கும் டெலிபோன் பயமுறுத்தல் வந்துள்ளது

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்து விற்பனை இரு தனியார் நிலையங்களுக்கும் யந்திர உபகரண விற்பனை நிலையமொன்றுக்குமே இந்த அனுமதேய தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்தனவாம்

இந்த அனுமதேய தொலைபேசி அழைப்புக்களைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதாயினும் சிறிதுநேரத்தின் பின் இருவர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

இவ் எச்சரிக்கை விடப்பட்டிருந்தபோதும் நேற்று ஷெல் தாக்குதல் இடம்பெறவில்லை. (வா)

## விண்ணப்பங்கள் நேரில் கையளிக்க வசதி

யாழ்ப்பாணம், சனி

1986ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யத் தவறியவர்களின் நலனை முன்னிட்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பங்களை இன்றும் நாளையும் நேரடியாக தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கலாமென்று யாழ் தேர்தல் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ் விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்காக இன்றும் நாளையும் விடுமுறைகளாக இருந்தபோதும் தேர்தல் அலுவலகம் திறந்திருக்குமென அறிவித்துள்ளார். (வா)

## மாகாணம்--

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகள் விவகாரம் தொடர்பாக கூறிய சிவசிதம்பரம் அவர்கள் சட்டம், ஒழுங்கு, கல்வி, கைத்தொழில், காணிச்சீர்திருத்தம் ஆகியவைகள் தொடர்பாக முழுப்பொறுப்பையும் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறினார் மேலும் தமிழர் பிரச்னைகளுக்கானத் தீர்வு காலதாமதப்படுத்தப்படாமலிருப்பதற்காக இலங்கை அரசை அமெரிக்கா வற்புறுத்த வேண்டுமெனவும் கூறிய அவர், காலதாமதம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் லெபனானில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலைதான் இலங்கையிலும் ஏற்படும் என்று கூறினார்.

திரு. சிவசிதம்பரத்துடன் அமெரிக்க தமிழீழச் சங்கத்தின் செயலாளர் நாயகம் ஸ்ரீதரனும் உடன் சென்றிருந்தார். இவர்களின் வேண்டுகோளை அடுத்து அமெரிக்காவின் ஆசியபசுபிக் விவகாரங்கள் தலைவரான ஸ்ரீபன் சோலார்ஸ்மோர்வின் டைமலி ஆகியோரைக் கொண்ட தூதுக்குழு ஒன்று இந்தியா இலங்கை ஆகிய நாடுகளுக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளது. (கே-ரா)

## மரண அறிவித்தல்

### லில்லி அக்கினேஸ் சுவாம்பிள்ளை

லில்லி அக்கினேஸ் சுவாம்பிள்ளை (தங்கப்பொன்) காலமாகிவிட்டார். இவர் S S சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் டொன்பொஸ்கோ, நீற்ரூ, யுலியட், துரை, ஜெயபாலன்பவி ஆகியோரின் அன்புத் தாயாரும், லூயிஸ், இந்திரன், பேபி, சார்ளற் ஆகியோரின் அன்பு மாமியாரும், பேபி மரியநாயகம், அலோசியஸ், மேரி யோசப், மேபின் பிரான்சீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை ரிசுத்தபேதுரு பாவிலு சேமக்காலையில் இன்று (29-11-86) நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: S. S. சுவாம்பிள்ளை,
நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை.
(C 6079)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

சர்வதேச விண்வெளி

## ஆராய்ச்சி நிலைய தலைமையகம் இந்தியாவில் நிறுவப்படவேண்டும்

### கொர்பச்சேவ்

புதுடில்லி நவ 28

"விண்வெளி சமாதானமுயற்சிகளுக்காக ஆராயப்படவேண்டும் அதற்காக இந்தியாவை தலைமையகமாகக் கொண்டு ஓர் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட வேண்டும்"

இவ்வாறு சோவியத் அதிபர் திரு மிக்கைல் கொர்பச்சேவ் இந்திய பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தப்படவேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினர். அரசியல் சட்டரீதியில் ஐ நா. வலுவடைய உலகநாடுகள் உதவவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

ஐ நாவின் பொருளாதார நெருக்கடியைப்போக்க சோவியத் யூனியன் உதவும் என்றும் திரு. கொர்பச்சேவ் கூறினார்,

இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதிக்காக ஏனைய நாடுகளுடன் இணைந்து தமது போர்க்கப்பல்களின் எண்ணிக்கைகளை குறைத்துக் கொள்ள தயாராக இருப்பதாகவும் கூறினார், (எ)

## மரண அறிவித்தல்

### செல்லா இராசையா

செல்லா இராசையா காலமானார் அன்னார் நல்லம்மாவின் அன்புக்கணவரும், கருணவதி, சுமித்திரா சாரதாதேவி, நஞ்சினி, உதயகுமாரி, சிவகுமாரி, பாலசுந்தரி, ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீதரன், நகுலரூபா, நவரட்ணம், மகாலிங்கம், ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 29-11-86 இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக சேரம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நகுலரூபா
10/3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 6070)

### செல்லத்துரை துரையப்பா பத்தர்
(கண்ணாடி சின்னத்தம்பி)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லத்துரை துரையப்பாபத்தர் (கண்ணாடி சின்னத்தம்பி, காலமானார். இவர் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாட்டுமார் கோவில) தர்மகர்த்தா சபை உபதலைவர். 29-11-86 இன்று சனிக்கிழமை அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகேஸ்வரன் (மகன்)
[C 6071]